بسم الله الرحمن الرحیم نحمدہ ونصلی علیٰ رسولہ الکریم وعلیٰ عبدہ المسیح الموعود
وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَّأَنْتُمْ أَذِلَّةٌ

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly BADAR Qadian TAMIL

தொகுதி 6

இதழ் 26

வருடாந்திர சந்தா ரூபாய் 575/-

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அப்துர் ரஹ்மான் தாஹிர்

20 துல் கஃதா 1442 ஹிஜ்ரி கமரி 01 வஃபா 400 ஹிஜ்ரி ஷம்ஸி தப்லீக் 01 ஜூலை 2021

## அல்லாஹ்வின் கட்டளை

يٰٓاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوا اتَّقُوا اللّٰهَ وَابْتَغُوْٓا اِلَيْهِ الْوَسِيْلَةَ وَجَاهِدُوْا فِيْ سَبِيْلِهٖ لَعَلَّكُمْ تُفْلِحُوْنَ○

நம்பிக்கை கொண்டவர்களே! அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள். அவனை அணுகும் வழியினைத் தேடுங்கள். நீங்கள் வெற்றி பெறுவதற்கு அவனுடைய வழியில் முயலுங்கள். (5:36)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்ய–தஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவி–யாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்.

# மஸீஹ் (அலை) தனது சமுதாயத்துடன் துன்பங்களை சந்தித்து வந்தபோது நீங்கள் எங்களிடத்தில் வந்து விடுங்கள் என்று நஸீபைனின் ஆட்சியாளர் கடிதம் எழுதியிருந்தார். எனவே மஸீஹ் (அலை) அவர்கள் நஸீபைனிற்கு நிச்சயம் வந்தார்கள் என்றும் அந்த வழியாகவே அன்னார் இந்தியாவை வந்தடைந்தார்கள் என்றும் உறுதி ஏற்படுகின்றது

வாக்களிக்கப்பட்ட மஸீஹும் உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து...

சிலுவையில் மஸீஹின் மரணம் நிகழவில்லை. இந்த ஒரு விவகாரத்தின் மூலமாக கிறிஸ்துவத்தின் தூண் உடைந்து விடுகின்றது. ஏனென்றால் மஸீஹின் மரணம் சிலுவையில் நிகழாதபோது, அவர் மூன்று நாட்களுக்குப் பிறகு உயிர்த்தெழுந்து விண்ணிற்கு செல்லாதபோது பின்னர் இறைத்தன்மை மற்றும் பரிகாரம் எனும் கட்டடம் முற்றிலும் அடித்தளத்துடன் இடிந்து விழுந்து விடுகிறது.

முஸ்லிம்களின் தவறான எண்ணமும் இதன் மூலம் அகன்று விடுகிறது. அதாவது ஈஸா உயிருடன் விண்ணிற்கு சென்று விட்டார். விண்ணிலிருந்து மீண்டும் இறங்கி வருவார் என்ற எண்ணத்தின் காரணமாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு கடுமையான அவமரியாதை ஏற்பட்டிருந்தது. உள்ளபடியே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்குப் பிறகு எந்தவொரு புதிய மற்றும் பழைய நபியும் வர முடியாது. எவரது நபித்துவத்தின் மீது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முத்திரை பதிக்கப்படவில்லையோ அவர் வர முடியாது).

திருக்குர்ஆனின் அசல் மற்றும் தூய்மையான போதனை உண்மை என நிரூபணமாகி விட்டது. ஏனென்றால் திருக்குர்ஆனில் فَلَمَّا تَوَفَّيْتَنِيْ (நீ எனக்கு மரணத்தை தந்தபோது) என்ற மஸீஹ் (அலை) அவர்களின் தெளிவான ஒப்புதல் வாக்குமூலம் இடம் பெற்றுள்ளது. அதனை எவரும் நிராகரிக்க முடியாது.

### மஸீஹின் மரணம் என்ற விவகாரத்தில் அழுத்தம் கொடுப்பதற்கான காரணம்

நாம் மஸீஹின் மரணத்தில் மிகவும் அதிகமாக அழுத்தம் கொடுக்கின்றோம். ஏனென்றால் அவரின் மரணத்துடன் கிறிஸ்துவ மார்க்கத்தின் மரணமும் அடங்கியுள்ளது. இந்த நோக்கத்திற்காக நான் இந்தியாவில் இயேசு என்ற புத்தகத்தை எழுதத் தொடங்கியுள்ளேன். இந்த புத்தகத்தின் சில தலைப்புகளை முழுமை செய்வதற்காக நான் இதனை செய்வதை உகந்ததாக கருதினேன். அதாவது எனது ஜமாஅத்தைச் சேர்ந்த சில அஹ்மதிகளை அந்தப் பகுதிகளுக்கு அனுப்பி மஸீஹ் அங்கு தங்கி இருந்ததற்கான தாக்கம் தொடர்பான தகவல்களை அறிந்து வர அனுப்புவதை உகந்ததாக கருதினேன். அந்த நண்பர்களை அங்கு வழியனுப்பி வைப்பதற்கு முன்பு நாம் அனைவரும் இணைந்து அவர்களுக்காக துஆ செய்ய வேண்டும் என்ற இந்த நோக்கத்தை கருத்தில் கொண்டும், அவர்கள் நலமுடன் இந்த அருளுக்குரிய பயணத்திற்கு புறப்பட வேண்டும். மேலும் வெற்றி பெற்று திரும்ப வேண்டும் என்பதற்காகவும் துஆ செய்வதற்கு இந்த கூட்டத்தை நாம் கூட்டியுள்ளோம்.

### ஹஸ்ரத் மஸீஹ் (அலை) அவர்கள் சிலுவை சம்பவத்திற்குப் பிறகு நஸீபைன் சென்றார்கள்

இந்தப் பயணத்திற்கு ஆலோசனை வழங்கப்பட்டது. அவ்வாறு ஆலோசனை வழங்கப்படாமல் இருந்திருந்தாலும் இறைவன் தனது அளப்பெரும் அருளாலும், கருணையாலும் இந்த விவகாரத்திற்கு தேவையான ஆதாரங்களை சான்றுகளை எனக்கு வழங்கி விடுவான் என்பது எனது நம்பிக்கையாகும். எதிரியின் எழுதுகோலும், நாவும் அந்த ஆதாரங்களையும், சான்றுகளையும் முறியடிக்க முடியாது. இது எனது நம்பிக்கையாகும். ஆனால் நம்பிக்கையாளர் எப்போதும் முன்னேற்றங்களுக்கு ஆசைப்படுகின்றார். அதிக அதிகமான உண்மைத்துவம் மற்றும் இறை ஞானம் என்ற பசி கொண்டவராகவும் தாகம் கொண்டவராகவும் நம்பிக்கையாளர் இருக்கின்றார். ஒருபோதும் அவர் திருப்தி அடைவதில்லை. எனவே எந்த அளவு சான்றுகளும் ஆதாரங்களும் கிடைக்குமோ அது நல்லதாகும் என்று நாமும் ஆசைப்படுகின்றோம்.

இந்த நோக்கத்திற்காகவே நாம் எமது நண்பர்களை நஸீபைனை நோக்கி அனுப்பி வைக்கின்ற இந்த நிகழ்ச்சிக்கான தேவை ஏற்பட்டுள்ளது. ஹஸ்ரத் மஸீஹ் அவர்கள் தனது நன்றிகெட்ட சமுதாயத்தின் கரங்களால் தொல்லைகளை எதிர்கொண்டு வரும்போது நீங்கள் என்னிடத்தில் வந்து விடுங்கள் என்று அங்குள்ள ஆட்சியாளர் எழுதியிருந்தார் என்பது நமக்கு தெரிய வருகின்றது.

சிலுவை சம்பவத்திலிருந்து தப்பித்த பிறகு அந்த இடத்தை அடைந்தன் மூலம் துர்பாக்கியம் பெற்ற சமுதாயத்தின் கரத்திலிருந்து அவர் (மஸீஹ்) இரட்சிப்பு பெற்றார். நீங்கள்

*(தொடர்ச்சி 11 வது பக்கம்...)*

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**எவர்கள் கலப்பற்றவர்களாக கிலாஃபத்திற்கு கட்டுப்பட்டவர்களாக இருப்பார்களோ அவர்களே உண்மையான முறையில் கிலாஃபத்துடன் நன்றியுணர்வு மிக்க தொடர்பை வைக்கக்கூடியவர்களாக இருப்பார்கள். அத்தகைய மக்கள் கிலாஃபத்தை பாதுகாக்கக் கூடியவர்களாகவும் இருப்பார்கள். கிலாஃபத் அவர்களை பாதுகாக்கக்கூடியதாகவும் இருக்கும். காலத்தின் கலீஃபாவின் துஆக்கள் அவர்களுடன் இருக்கும். அவர்களின் வேதனைகள் அவர்களுக்காக காலத்தின் கலீஃபாவை துஆ செய்வதற்கு கவனமூட்டக்கூடியதாக இருக்கும்**

**ஆக இதுவே உண்மையான கிலாஃபத் ஆகும். அதில் ஜமாஅத் மற்றும் காலத்தின் கலீஃபாவின் தொடர்பு அல்லாஹ்வின் திருப்தியை பெறக்கூடியதாக உள்ளது. இந்த கிலாஃபத்தே வலிமை மற்றும் அமைதியின் காரணியாக அமைந்துள்ளது**

**எனவே இவ்விஷயங்களால் எங்கு நம்மிடத்தில் நன்றியுணர்வு தோன்ற வேண்டுமோ அங்கு அல்லாஹ்வின் முன் குனிபவர்களாகவும் நாம் இருக்க வேண்டும். அவன் நமக்கு கிலாஃபத் எனும் அருட்கொடையை வழங்கியுள்ளான். அதே நேரம் நாம் எப்போதும் அல்லாஹ்வின் அச்சத்தை உள்ளத்தில் கொண்டவர்களாக இருக்க வேண்டும்**

**நமது ஒவ்வொரு செயலும் அல்லாஹ்வின் திருப்தியை பெறுவதற்காக மட்டுமே அமையும்போதுதான் அது அல்லாஹ் மற்றும் அவனது தூதருக்கு முழுமையான கட்டுப்படுதலாக அமையும். மன அமைதியும், நிம்மதியும் அப்போது தான் கிடைக்கும்**

**எனவே ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் முன்னறிவிப்பிற்கேற்பவும் அல்லாஹ் அன்னாருடன் செய்த வாக்குறுதிக்கேற்பவும் கடந்த 113 ஆண்டுகளாக அல்லாஹ்வின் அருட்கள் சொல்லுக்கு சொல் முழுமையாக நிறைவேறுவதை நாம் பார்த்து வருகின்றோம்**

**முழுமையாக கட்டுப்படுவதும், கலீஃபாவின் எந்தவொரு கட்டளைக்கும் மாறு செய்யாமல் இருப்பதும் தான் பைஅத் ஆகும்**

**உறுதிமிக்க கலீஃபா ஜமாஅத்தின் கப்பலை அல்லாஹ்வின் உதவி ஒத்தாசையுடன் வெற்றியின் படித்தரங்களை சென்றடையச் செய்தார். மேலும் ஜமாஅத்தை பாதுகாத்தார்**

**அல்லாஹ் கிலாஃபத்துடன் தொடர்பை நிலைநாட்டுவதற்கு ஒரு புதிய வழியை நமக்கு புரிய வைத்து விட்டான். அது Online சந்திப்பு அல்லது Virtual சந்திப்பின் மூலமாக இந்த கோவிட் நோயின் காரணத்தால் நம் முன் வெளிப்பட்டுள்ளது. இந்த வழிமுறை மூலமாக கூட்டங்களும் நடைபெறுகின்றன. சந்திப்புகளும் நடைபெறுகின்றன. இதன் மூலம் ஜமாஅத்துகளுடன் நேரடியான தொடர்பு ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றது. காலத்தின் கலீஃபாவிடமிருந்து மக்கள் நேரடியாக வழிகாட்டல் பெற்று வருகின்றனர். நான் இங்கு லண்டனிலிருந்து, சில சமயம் ஆஃப்ரிக்காவின் சில நாடுகளுடனும், சில சமயம் இந்தோநேஷியாவுடனும், சில முறை ஆஸ்திரேலியாவுடனும், சில முறை அமெரிக்காவுடனும் சந்திப்பு நிகழ்த்துகிறேன். ஆக இவை அனைத்தும் இறைவனின் உதவிக்கான காட்சிகளாகும்.**

**அல்லாஹ் தனது அருட்களால் இந்த காட்சிகளை காட்டுகின்றான். இறைவன் நமக்கு செய்துள்ள அருட்களில் இது ஓர் அருளாகும் என்பதையும், நாம் எப்போதும் அதற்குரிய உரிமைகளை வழங்கக்கூடியவர்களாக ஆக வேண்டும் என்பதையும் ஒருபோதும் நாம் மறந்து விடக்கூடாது**

ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டன் இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 28 மே 2021** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1400 -ஆம் ஆண்டு **ஹிஜ்ரத்** மாதம் **28 ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

اَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَاَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ

اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ-

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ-الرَّحْمٰنِ الرَّحِيْمِ- مٰلِكِ يَوْمِ الدِّيْنِ-اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ-

اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ-صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ

غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ

اَلَّذِيْنَ يُنْفِقُوْنَ أَمْوَالَهُمْ بِاللَّيْلِ وَالنَّهَارِ سِرًّا وَّعَلَانِيَةً فَلَهُمْ أَجْرُهُمْ عِنْدَ رَبِّهِمْ وَلَا خَوْفٌ عَلَيْهِمْ وَلَا هُمْ يَحْزَنُوْنَ

وَعَدَ اللّٰهُ الَّذِيْنَ اٰمَنُوْا مِنْكُمْ وَعَمِلُوا الصّٰلِحٰتِ لَيَسْتَخْلِفَنَّهُمْ فِي الْاَرْضِ كَمَا اسْتَخْلَفَ الَّذِيْنَ مِنْ قَبْلِهِمْ ۪ وَلَيُمَكِّنَنَّ لَهُمْ دِيْنَهُمُ الَّذِي ارْتَضٰى لَهُمْ وَلَيُبَدِّلَنَّهُمْ مِّنْۢ بَعْدِ خَوْفِهِمْ اَمْنًا ؕ يَعْبُدُوْنَنِيْ لَا يُشْرِكُوْنَ بِيْ شَيْئًا ؕ وَمَنْ كَفَرَ بَعْدَ ذٰلِكَ فَاُولٰٓئِكَ هُمُ الْفٰسِقُوْنَ ○ وَاَقِيْمُوا الصَّلٰوةَ وَاٰتُوا الزَّكٰوةَ وَاَطِيْعُوا الرَّسُوْلَ لَعَلَّكُمْ تُرْحَمُوْنَ ○

பொருள்: அல்லாஹ் உங்களுள் நம்பிக்கை கொண்டு நற்செயலாற்றுபவர்களை, அவர்களின் முன்னோர்களை கலீஃபாவாக (தலைவராக) ஆக்கியது போன்று இப்பூமியில் கலீஃபாவாக ஆக்குவதாகவும், அவன் அவர்களுக்காக விரும்பிய அவர்களின் மார்க்கத்தை அவர்களுக்கு உறுதிப்படுத்துவதாகவும் அவன் அவர்களுக்கு அவர்களது அச்சத்திற்குப் பிறகு அதற்குப் பதிலாக அமைதியினை வழங்குவதாகவும் அவர்களிடம் வாக்குறுதியளித்துள்ளான். அவர்கள் என்னையே வணங்குவார்கள். எதனையும் எனக்கு இணையாக்கமாட்டார்கள். இதன் பின்னரும் நிராகரிப்பவர்கள் கட்டுப்படாதவர்களாவார்கள். (24:56)

நேற்று மே 27 ஆக இருந்தது. அதனை நாம் கிலாஃபத் தினத்தின் பெயரால் நினைவு கூருகின்றோம். கிலாஃபத் தினத்தை ஒட்டியும், அதனை அடிப்படையாகக் கொண்டும் ஜமாஅத்தில் கூட்டங்கள் நடைபெறுகின்றன. ஜமாஅத்தின் வரலாறு குறித்தும் கிலாஃபத்தின் அடிப்படையில் நமது பொறுப்புகளை குறித்தும் அறிந்தவர்களாக நாம் இருக்க வேண்டும் என்பதற்காகவும், கிலாஃபத்தின் பைஅத்தில் வந்த பிறகு அதன் கடமைகளை ஆற்றக் கூடியவர்களாக நாம் இருக்க வேண்டும் என்பதற்காகவும் இந்த கூட்டங்கள் நடத்தப்படுகின்றன. இதன் மூலம் அல்லாஹ்வின் அருட்களுக்கு நாம் வாரிசுகளாகிக் கொண்டே இருக்க வேண்டும்.

இஸ்லாத்தின் உண்மையான போதனைகளை எடுத்துக் கூறுவதற்காக இக்காலத்தில் அல்லாஹ்வால் அனுப்பப்பட்ட நபரை நாம் ஏற்றுக் கொண்டிருக்கின்றோம். இது அல்லாஹ் நம்மீது செய்த கருணையாகும்.

இதன் பிறகு வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் நமக்கு கூறிய போதனைகளை நாம் நம் மீதும் நமது பிள்ளைகளிடத்திலும் செயல்படுத்துவதற்காகவும், முழு உலகிலும் அதனை பரப்பிக் கொண்டே செல்ல வேண்டும் என்பதற்காகவும் நாம் கிலாஃபத்தின் பைஅத்தின்கீழ் வந்திருக்கின்றோம். எனவே அஹ்மதிய்யா கிலாஃபத்துடன் தொடர்புடையவர்களாக இருப்பது ஏராளமான பொறுப்புகளை நம்மீது சுமத்தி இருக்கின்றது. இந்த பொறுப்புகளை நாம் நிறைவேற்றும்போதுதான் அல்லாஹ் நம்மீது செய்த கருணைக்கு உரிய உரிமைகளை நாம் வழங்கக்கூடியவர்களாக நாம் இருப்போம்.

நான் ஓதிய அந்த வசனத்தில் எங்கு அல்லாஹ் உறுதிப்பாடு வழங்குவதற்கும், அச்சத்தை அமைதியில் மாற்றுவதற்கும் வாக்குறுதி வழங்கியுள்ளானோ அங்கு இந்த வாக்குறுதியையும் இணைத்திருக்கின்றான். அதாவது உறுதியான ஈமான் உடையவர்களாக இருக்க வேண்டும். நற்செயல் ஆற்றக்கூடியவர்களாக இருக்க வேண்டும். இறைவணக்கத்திற்குரிய உரிமைகளை நிறைவேற்றக்கூடியவர்களாக இருக்க வேண்டும். அல்லாஹ்விற்கு எதனையும் இணை ஆக்காதவர்களாக இருக்க வேண்டும். ஷிர்க்கின் எந்தவொரு அம்சமும் உங்களிடத்தில் இல்லாமல் இருக்க வேண்டும் என்றும் கூறியுள்ளான்.

மேலும் இந்த விஷயங்களை பெறுவதற்கு அல்லாஹ்வை வணங்குவதும் தொழுகையும் மிகவும் அவசியமாகும். தொழுகை என்பது இறைவன் கூறியுள்ள இறைவணக்கத்திற்கான வழிமுறையாகும். அந்த தொழுகைகளை நிறைவேற்றக்கூடியவர்களாக நீங்கள் ஆக வேண்டும். அல்லாஹ்வின் வழியில் செலவிடுவது மிகவும் அவசியமாகும். அல்லாஹ்வின் வழியில் செலவிடுபவர்களாக நீங்கள் ஆக வேண்டும். தூதருக்கு கட்டுப்படுவது மிக மிக அவசியமாகும். அவரது அனைத்து கட்டளைகளையும் ஏற்றுக் கொள்ளக்கூடியவர்களாக நீங்கள் ஆக வேண்டும்.

இவை அனைத்தும் அந்த வசனத்தில் கூறப்பட்டுள்ள நிபந்தனைகளாகும். இந்த விஷயங்களை நாம் நினைவிற் கொள்ளும்போதும், நமது வாழ்க்கையை அதற்கேற்ப ஆக்கிக் கொள்வதற்கு நாம் முயற்சி செய்யும்போதும் மேலும் உலகத்தை விட மார்க்கத்திற்கு முன்னுரிமை வழங்குவோம் என்று நாம் செய்த உடன்படிக்கையின்படி உண்மையான உள்ளத்துடன் செயல்படுவதற்கு முயற்சி செய்யும்போதும்தான் அல்லாஹ் வாக்குறுதி அளித்துள்ள அந்த அருட்கொடைகளில் பங்கு பெறக்கூடியவர்களாக நாம் இருப்போம். மேலும் அப்போது தான் நாம் கிலாஃபத்தின் அருட்கொடையிலிருந்து உண்மையிலேயே பயன் பெறக்கூடியவர்களாக இருப்போம்.

எனவே இந்த வசனம் நம்பிக்கையாளர்களுக்கு ஒரு பெரும் நற்செய்தியை வழங்குகின்றது. ஆனால் அத்துடன் நமக்கு மிகவும் கவலைக்குரிய இடமாகவும் உள்ளது. ஏனென்றால் கூறப்பட்டுள்ள அந்த நிபந்தனைகளை நாம் முழுமையாக செயல்படுத்தவில்லை என்றால் பின்னர் அந்த அருட்கொடையிலிருந்து உண்மையான முறையில் நாம் பயன் பெற முடியாது. தொழுகை, ஜகாத், அல்லாஹ்விற்குரிய உரிமைகள் ஆகியவற்றை சரியாக நிறைவேற்றவில்லையென்றால், அடியார்களுக்குரிய உரிமைகளை நிறைவேற்றவில்லையென்றால் பின்னர் ஏற்கனவே கூறப்பட்டதுபோன்று அல்லாஹ்வின் கருணையையும், அருளையும் ஈர்க்கக்கூடியவர்களாக நம்மால் ஆக முடியாது.

எனவே நமது வரலாற்றை பற்றி மட்டும் அறிந்து கொள்வதும், கிலாஃபத் தினத்தை கொண்டாடுவதும் மட்டும் போதுமானதல்ல. நாம் உண்மையான அடியாராக மாறி விடாத வரை இவை போதுமானதல்ல. எனவே எதுவரை நாம் நமது தொழுகைகளை பாதுகாக்கக்கூடியவர்களாக ஆகிவிடுவதில்லையோ, அடியார்களுக்குரிய உரிமைகளையும், அல்லாஹ்விற்குரிய உரிமைகளையும் வழங்கக்கூடியவர்களாக நாம் ஆகிவிடுவதில்லையோ அதுவரை நாம் இந்த கிலாஃபத் தினத்தை கொண்டாடுவது எந்த பயனையும் தர முடியாது.

எனவே நமது ஈமானிய நிலை என்னவாக உள்ளது? நம்மிடத்தில் அல்லாஹ்வின் மீதான அச்சமும், பயமும் உள்ளதா? நாம் இறையச்சத்தின் நுட்பமான வழிகளில் செல்லக்கூடியவர்களாக இருக்கின்றோமா? எல்லா விஷயங்களை விடவும் அதிகமாக நாம் அல்லாஹ்வின் மீது அன்பு செலுத்தக்கூடியவர்களாக இருக்கின்றோமா? அல்லாஹ் மற்றும் அவனது தூதருக்கு முழுமையாக கட்டுப்பட்டு நடக்கக்கூடியவர்களாக நாம் இருக்கின்றோமா? அத்துடன் நமது ஒவ்வொரு செயலும் இஸ்லாத்தின் உண்மையான போதனைக்கேற்ப உள்ளதா? நமது செயல் எந்த வகையிலும் பிறருக்கு காட்டுவதற்காக இருக்கின்றதா? நமது தொழுகைகள் பிறருக்கு காட்டுவதற்கான தொழுகைகளாக உள்ளதா? நாம் செல்வத்தை செலவிடுவதும், ஜகாத் கொடுப்பதும் பகட்டிற்காக உள்ளதா? நாம் நோன்பு நோற்பது எந்த வகையிலும் பகட்டான நோன்புகளாக உள்ளனவா? நமது ஹஜ், ஹாஜி என்று கூறிக் கொள்வதற்காக மட்டும் உள்ளனவா? என்றெல்லாம் நாம் நம்மை நாமே ஆய்வு செய்வதற்கான அவசியம் உள்ளது.

நமது ஒவ்வொரு செயலும் அல்லாஹ்வின் திருப்தியை பெறுவதற்காக மட்டுமே அமையும்போதுதான் அது அல்லாஹ் மற்றும் அவனது தூதருக்கு முழுமையான கட்டுப்படுதலாக அமையும். மன அமைதியும், நிம்மதியும் அப்போது தான் கிடைக்கும். அப்போது தான் அந்த சமூகம் கிலாஃபத்தின்கீழ் நிழல் பெறக்கூடியதாக அமையும். அந்நிலையில்தான் நமது ஒவ்வொரு செயலும் அல்லாஹ்வின் உரிமைகளையும், அடியார்களுக்குரிய உரிமைகளையும் வழங்கக்கூடியதாக அமையும். எனவே வெறும் வாய்ப் பேச்சுக்கள் பயனளிக்காது. மாறாக, அந்த ஈமான் கொள்ளக்கூடியவர்கள் இதிலிருந்து பயன் பெறுவார்கள். அவர்களின் செயல்கள் நற்செயல்களாக இருக்கும் என்ற அல்லாஹ்வின் இந்த வழிகாட்டுதல்களை எப்போதும் நாம் கண் முன் நிறுத்த வேண்டும்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: அல்லாஹ் திருக்குர்ஆனில் ஈமானுடன் நற்செயல்களை சேர்த்து குறிப்பிட்டுள்ளான். எந்த செயலில் அணு அளவும் குழப்பம் இருக்காதோ அதனையே அமலே சாலிஹா (நற்செயல்) என்று கூறுவர். நினைவிற் கொள்ளுங்கள். மனிதனின் செயலுக்குப் பின்னால் எப்போதும் திருடன் ஒளிந்திருக்கின்றான். அவை என்ன? அந்த திருடர்கள் யார்? அவர்கள் இவர்கள் ஆவர். அதாவது பகட்டு (மனிதன் பிறருக்கு காட்டுவதற்காக ஒரு அமலை செய்கின்றான்), தற்பெருமை (ஒரு அமலை செய்து விட்டு நான் பெரிய நன்மை செய்து விட்டேன் என்று தனது உள்ளத்தில் மகிழ்ச்சியடைகின்றான்), பல தரப்பட்ட தீமைகள் (அதனை மனிதன் சில முறை உணர்வது கூட கிடையாது), மனிதனிடமிருந்து வெளிப்படும் பாவங்கள். இதன் மூலம் செயல்கள் வீணாகி விடுகின்றன.

அமலே சாலிஹா என்பது, அநீதியும், தற்பெருமையும், பகட்டும், பிற மனிதர்களுக்குரிய உரிமையை பறிக்க வேண்டும் என்ற

எண்ணமும் இல்லாத செயல்கள் ஆகும். இவையே நற்செயல்கள் ஆகும். இவற்றை செய்யாமல் இருப்பது மட்டுமல்ல. அதற்கான எண்ணம் கூட உள்ளத்தில் கொள்ளக் கூடாது. அப்போது தான் அவர் உண்மையான நம்பிக்கையாளராக ஆக முடியும். மேலும் நற்செயல் ஆற்றக்கூடியவர் என்று அழைக்கப்பட முடியும்.

மறுமையில் எவ்வாறு நற்செயல்களால் மனிதன் தப்பிக்கின்றானோ அதுபோலவே இவ்வுலகிலும் தப்பிக்கின்றான். குடும்பத்தில் நற்செயல் ஆற்றுகின்ற நபர் ஒருவர் இருந்தாலும் அதன் மூலம் முழு குடும்பமும் பாதுகாப்பாக இருக்கின்றது. உங்களிடத்தில் நற்செயல் இல்லாத வரை வெறும் வாயளவில் ஒப்புக் கொள்வதால் எந்த பயனும் இல்லை என்பதை புரிந்து கொள்ளுங்கள்.

(மல்ஃபூஸாத் தொகுதி 4 பக்கம் 274, 275)

எனவே ஈமானுடன் நற்செயல்கள் மிக மிக அவசியமான நிபந்தனையாகும். அடுத்து அன்னார் கூறினார்கள்: நமது திட்டங்களாலும், எண்ணங்களாலும் நற்செயலை வரையறுக்க முடியாது. நற்செயல் என்று நாம் கூறுவதால் அது நற்செயல் ஆகி விடாது. உண்மையில் எந்த செயலில் எவ்வகையான குழப்பமும் இல்லாமல் இருக்குமோ அவையே நற்செயல்கள் ஆகும். ஏனென்றால் நற்செயல் என்பது குழப்பத்திற்கு எதிரானதாகும். உதாரணமாக, நல்ல உணவு என்பது எப்போது அமையும் என்றால் அது வேக வைத்ததாகவும், கெட்டுப் போகாமலும் இருக்கும்போதுதான் அது தூய்மையான உணவாக இருக்க முடியும். இன்னும் கூறப்போனால் உடனடியாக உடலின் அங்கமாக ஆகிவிடும்போதுதான் (அதாவது நல்ல செரிமானம் ஆகிவிடும்போதுதான்) அது தூய உணவாக இருக்க முடியும்.

தூய உணவு என்பது என்னவென்றால், அதில் எவ்வித குறையும் இருக்கக்கூடாது. அதேபோன்று நற்செயலிலும் எவ்வகையான குழப்பமும் இருக்கக்கூடாது. இது அவசியமாகும். அதாவது அல்லாஹ்வின் கட்டளைக்கேற்ப அந்த செயல் அமைய வேண்டும். அல்லாஹ் வழங்கியுள்ள கட்டளைக்கேற்ப அந்த அமல் இருக்க வேண்டும். அடுத்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சுன்னத்திற்கேற்ப இருக்க வேண்டும்.

அதாவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் செய்த செயலைப் போன்றும், அவர்கள் செய்து காட்டியதைப் போன்றும், அவர்கள் கூறியதைப் போன்றும் அந்த செயல் இருக்க வேண்டும். மேலும் அதில் எவ்வகையான சோம்பேறித்தனமும் இருக்கக்கூடாது. இந்த செயலை செய்வதில் பெருமிதமும், பகட்டும் இருத்தல் கூடாது. மேலும் சுய திட்டத்தால் உருவாக்கிக் கொண்ட செயலாகவும் இருக்கக்கூடாது. இவ்வாறான செயலாக ஒரு செயல் அமையும்போதுதான் அது நற்செயல் என்று கூற முடியும்.

உங்களது திட்டத்தால் சுயமாக நீங்கள் ஒன்றை உருவாக்கிக் கொண்டிருக்கக்கூடாது. நீங்கள் சுயமாக நற்செயல்களுக்கு விளக்கங்களை கொடுத்துக் கொண்டிருக்கக்கூடாது. இதனால் இன்ன இன்ன நோக்கம் உள்ளது என்று நீங்கள் சுயமாக கூறுபவர்களாக இருக்கக்கூடாது. மாறாக சொல்லுக்கு சொல் அல்லாஹ் மற்றும் அவனது தூதரின் கட்டளைகளின்படி நீங்கள் செயல்பட வேண்டும். அப்போதுதான் அது நற்செயலாக இருக்கும்.

(மல்ஃபூஸாத் தொகுதி 6 பக்கம் 425, 426)

இது மிக, மிகப் பெரிய மற்றும் முக்கியத்துவம் வாய்ந்த விஷயமாகும். இந்த நிலையை நாம் பெற்று விட்டால் பின்னர் அல்லாஹ்வின் வாக்குறுதியிலிருந்து பயன் பெறுபவர்களாக நாம் ஆகி விட்டோம் என்று புரிந்து கொள்ளுங்கள். மேலும் இத்தகைய மக்களே அஹ்மதிய்யா கிலாஃபத்தை நிலைநாட்டுவதற்கான உடன்படிக்கையை செய்யக்கூடியவர்களாகவும், அதனை முழுமை செய்யக்கூடியவர்களாகவும் இருப்பார்கள். இதற்கு மாற்றமாக தங்களது சுய நலன் முன்னால் வரும்போது நற்செயலுக்கு சுயமே விளக்கம் அளிப்பவர்களும். நல்ல தீர்மானம் என்பதற்கு சுயமே விளக்கம் அளிப்பவர்களும், நான் என்ற அகந்தையின் கட்டுப்பாட்டில் சென்றுவிடும் மக்களும் கிலாஃபத்தை நிலைநாட்டுவதற்கான உடன்படிக்கையை முழுமை செய்ய மாட்டார்கள்.

நாங்கள் கிலாஃபத்துடன் இணைந்திருக்கின்றோம் என்ற இதுபோன்ற மக்களின் அறிவிப்பும் அவர்களுக்கு எந்த பயனையும் தர முடியாது. நாங்கள் கிலாஃபத்துடன் இணைந்திருக்கின்றோம் என்று அவர்கள் வேண்டுமானால் கூறிக் கொள்ளலாம். எவர்கள் கலப்பற்றவர்களாக கிலாஃபத்திற்கு கட்டுப்பட்டவர்களாக இருப்பார்களோ அவர்களே உண்மையான முறையில் கிலாஃபத்துடன் நன்றியுணர்வு மிக்க தொடர்பை வைக்கக்கூடியவர்களாக இருப்பார்கள்.

அத்தகைய மக்கள் கிலாஃபத்தை பாதுகாக்கக் கூடியவர்களாகவும் இருப்பார்கள். கிலாஃபத் அவர்களை பாதுகாக்கக்கூடியதாகவும் இருக்கும். காலத்தின் கலீஃபாவின் துஆக்கள் அவர்களுடன் இருக்கும். அவர்களின் வேதனைகள் அவர்களுக்காக காலத்தின் கலீஃபாவை துஆ செய்வதற்கு கவனமூட்டக்கூடியதாக இருக்கும். இந்த நற்செயல்களை செய்யக்கூடியவர்களுக்கு கிலாஃபத்துடன் உள்ள உணர்வும், கிலாஃபத்திற்கு அவர்களுடன் இருக்கின்ற உணர்வும் அல்லாஹ்வின் திருப்தியை பெறுவதற்காகவே அமைந்துள்ளது.

ஆக இதுவே உண்மையான கிலாஃபத் ஆகும். அதில் ஜமாஅத் மற்றும் காலத்தின் கலீஃபாவின் தொடர்பு அல்லாஹ்வின் திருப்தியை பெறக்கூடியதாக உள்ளது. இந்த கிலாஃபத்தே வலிமை மற்றும் அமைதியின் காரணியாக அமைந்துள்ளது. உறுப்பினர்கள் மற்றும் காலத்தின் கலீஃபாவினுடைய இதே தொடர்பு தான் இருவரையும் அல்லாஹ்வின் அருட்களை பெறக்கூடியதாக ஆக்குகின்றது. ஏனைய முஸ்லிம்கள் கிலாஃபத்தை நிலைநாட்ட விரும்புகின்றனர். ஆனால் தமது உலகியல் திட்டங்களாலும், உலகியல் முயற்சிகளாலும் விரும்புகின்றனர். இந்த முயற்சிகளும், திட்டங்களும் அவர்களுக்கு ஒருபோதும் பயனளிக்க முடியாது. மேலும் அவ்வாறு அவர்களால் கிலாஃபத்தை நிலைநாட்டவும் முடியாது. அவர்கள் எவ்வளவு வேண்டுமானாலும் முயற்சி செய்து கொள்ளட்டும். தற்போது இறைவன் தீர்மானித்தது போன்றே கிலாஃபத் தொடர முடியும்.

எனவே இவ்விஷயங்களால் எங்கு நம்மிடத்தில் நன்றியுணர்வு தோன்ற வேண்டுமோ அங்கு அல்லாஹ்வின் முன் குனிபவர்களாகவும் நாம் இருக்க வேண்டும். அவன் நமக்கு கிலாஃபத் எனும் அருட்கொடையை வழங்கியுள்ளான். அதே நேரம் நாம் எப்போதும் அல்லாஹ்வின் அச்சத்தை உள்ளத்தில் கொண்டவர்களாக இருக்க வேண்டும். மேலும் நமது செயல்களை கண்காணிக்கக் கூடியவர்களாகவும் இருப்பது அவசியமாகும். நமது செயல்கள் அல்லாஹ் மற்றும் அவனது தூதரின் கட்டளைக்கேற்ப அமைந்துள்ளனவா? என்றும் அல்லாஹ்விற்குரிய உரிமைகளை வழங்குவது, அடியார்களுக்குரிய உரிமைகளை நிறைவேற்றுவது ஆகிய விஷயங்களில் நமது செயல்களின் தரம் அல்லாஹ் கூறிய தரத்திற்கு ஏற்ப அமைந்துள்ளனவா? என்றும் நாம் கண்காணிக்க வேண்டும்.

எனவே ஒவ்வொரு அஹ்மதியும் ஒவ்வொரு நொடிப்பொழுதும் எங்கு அல்லாஹ்விற்கு நன்றி கூறுவதில் கழிக்க வேண்டுமோ (அதாவது அவன் நமக்கு கிலாஃபத் எனும் அருட்கொடையை வழங்கியுள்ளான். அதற்கு நன்றி கூற வேண்டும்.) அங்கு

அல்லாஹ்வின் கட்டளைக்கேற்ப அமல் செய்கின்றோமா? என்று நம்மை நாமே ஆய்வு செய்தவாறு நாம் ஒவ்வொரு நொடியையும் கழிக்க வேண்டும். இந்த எண்ணத்துடன் நாம் நமது வாழ்க்கையை கழிக்கும்போதும், இதற்கேற்ப நமது செயல்களை ஆக்கிக் கொள்ளும்போதும் மேலும் கிலாஃபத் நிலைபெற்றிருப்பதற்காக நாம் துஆக்கள் செய்து கொண்டிருக்கும்போதும் நாம் அல்லாஹ்வின் அருட்கொடைகளுக்கு வாரிசுகளாக ஆகிக் கொண்டே செல்வோம்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களும் நமக்கு இதையே கூறியுள்ளார்கள். அல்லாஹ் உங்களுக்கு ஆறுதல் வழங்கியுள்ளான். கிலாஃபத் அமைப்பு தொடர்ந்து கொண்டிருக்கும். அல்லாஹ் அன்னாருக்கு வழங்கிய நற்செய்திகள் நிச்சயம் முழுமை பெறும். ஆனால் நாம் அந்த நிபந்தனைகளை முழுமை செய்யக்கூடியவர்களாக இருக்க வேண்டும்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: இது இறைவனின் நடைமுறையாகும். அவன் மனிதனை பூமியில் படைத்த நாளிலிருந்தே எப்போதும் இந்த நடைமுறையை வெளிப்படுத்தி வந்துள்ளான்.

كَتَبَ اللّٰهُ لَاَغْلِبَنَّ اَنَا وَرُسُلِیْ

நிச்சயமாக நானும் எனது தூதர்களும் வெற்றி பெற்றே தீருவோம் (58:22) என அல்லாஹ் எழுதி வைத்துள்ளான் என்று அவன் கூறியதற்கிணங்க அவன் தனது நபிமார்களுக்கும் தூதர்களுக்கும் உதவி செய்கின்றான். அவர்களுக்கு வெற்றியை வழங்குகின்றான். இங்கு வெற்றி என்பதன் கருத்து நபிமார்களும், தூதர்களும் விரும்பியபடி இறைவனின் உண்மையான அடையாளம் பூமியில் நிலைநாட்டப்பட வேண்டும் என்பதும், அதனை எவரும் எதிர்த்து நிற்க முடியாமல் ஆக வேண்டும் என்பதும் ஆகும்.

எனவே இறைவன் வல்லமைமிக்க அடையாளங்களுடன் அவர்களது உண்மையை வெளிப்படுத்துகின்றான். மேலும் அவர்கள் உலகில் பரப்ப விரும்பிய நேர்வழிக்கான விதையை அவர்களது கைகளாலேயே அவன் விதைத்து விடுகின்றான். ஆனால் அவர்களது கைகளால் அதனை முழுமையாக நிறைவு செய்ய அவன் வைப்பதில்லை. மாறாக, வெளிப்படையில் தோல்வி எனும் அச்சத்தை தன்னுள் கொண்டுள்ள ஒரு நேரத்தில் அவர்களுக்கு மரணத்தை கொடுத்து எதிரிகளுக்கு எள்ளி நகையாடவும், பழிச் சொற்களையும், அவதூறுகளையும் கூறுவதற்கு சந்தர்ப்பத்தை கொடுத்து விடுகின்றான். அவர்கள் எள்ளி நகையாடி பரிகாசம் செய்த பிறகு மீண்டும் தனது வல்லமையின் மற்றொரு கரத்தை காட்டுகின்றான். அதன் மூலம் ஓரளவுக்கு முழுமை பெறாமல் இருந்த அந்த நோக்கங்கள் அதன் முழுமையான நிறைவை எட்டி விடுவதற்கான சூழ்நிலைகளை உருவாக்கி விடுகின்றான்.

(அல் வஸிய்யத், ரூஹானீ கஸாயின் தொகுதி 20 பக்கம் 304, 305)

நாம் பார்க்கின்றோம். எங்கு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் மரணம் ஒவ்வொரு அஹ்மதியையும் நிலை குலைய செய்து விட்டதோ அங்கு அந்நியர்கள் மகிழ்ச்சியால் ஆடிப் பாடினர். அன்னாரின் மரணத்தைக் குறித்து எவ்வளவு மோசமான விஷயங்கள் பேசப்பட்டன என்றால் அவற்றை கேள்விப்பட்டு மனிதத்துவத்திற்கு வெட்கம் வந்து விடுகின்றது. மிக வீணான பேச்சுக்களை அவர்கள் பேசினர். அல்லாஹ் மற்றும் அவனது தூதரின் பெயரை கூறக் கூடியவர்கள் இந்த அளவுக்கு தரம் தாழ்ந்து விடுவார்களா? என்றும் மனிதன் ஆச்சரியப்படுகின்றான். இந்த அனைத்து வீணான காரியங்களையும் எடுத்துரைப்பதற்கு எனக்கு அவசியம் இல்லை.

ஆயினும் அவர்களின் ஏனைய சில முயற்சிகளை நான் குறிப்பிடுகின்றேன். அதாவது ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ (அலை) அவர்களின் மரணத்திற்குப் பிறகு ஜமாஅத்தை அழித்து விடுவதற்கு அவர்கள் எவ்வாறெல்லாம் முயற்சி செய்தார்கள் என்பதை குறிப்பிடுகின்றேன். ஜமாஅத்தின் ஒற்றுமை சிதறி விட வேண்டும் என்பதற்காக அஹ்மதிகள் அஹ்மதிய்யத்திலிருந்து தவ்பா செய்து விட்டதாக பொய்யான செய்திகளை அவர்கள் பரப்பினர். உதாரணமாக, பீர் ஜமாஅத்தின் அலி ஷா என்பவரின் சீடர்கள், மிர்ஸாயிகள் தவ்பா செய்து பைஅத் செய்து வருகின்றனர் என்று கூறினர்.

(தாரீகே அஹ்மதிய்யத் தொகுதி 3 பக்கம் 204)

அதாவது ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் மரணத்திற்குப் பிறகு அஹ்மதிகள் அஹ்மதிய்யத்திலிருந்து தப்வா செய்து அவர்களின் ஜமாஅத்தில் இணைந்து விட்டதாக வதந்திகளை பரப்பினர். காஜா ஹஸன் நிஸாமி சாஹிப் அஹ்மதிகளுக்கு ஆலோசனை வழங்கியவாறு இவ்வாறு கூறினார்: தற்போது மிர்ஸா சாஹிபின் மஸீஹ் என்ற வாதத்தையும், மஹ்தி என்ற வாதத்தையும் அஹ்மதிகள் தெளிவாக மறுதலித்து விட வேண்டும். இல்லையென்றால் மிர்ஸா சாஹிப் போன்ற புரியும் தன்மை கொண்ட, நல்ல நிர்வாகி இல்லாத நிலையில் அன்னாரை இழந்த காரணத்தால் அஹ்மதிகள் எதிரிகளின் கூட்டத்தின் எதிர்ப்புகளை சகித்துக் கொள்ள முடியாது. அவர்களின் அமைப்பு சிதறுண்டு விடும்.

(தாரீகே அஹ்மதிய்யத் தொகுதி 3 பக்கம் 206)

மிகவும் அரசியல் ரீதியாக தன் புறமிருந்து மென்மையான சொற்களில் இந்த ஆலோசனையை அவர் வழங்குகின்றார். இந்த நபர் வெளிப்படையில் மிகவும் பண்பட்ட இயல்புடையவராக இருந்தார். அவர் மிகவும் பணிவுள்ளவராக மாறி, அனுதாபியாக திகழ்ந்து அஹ்மதிகளுக்கு இவ்வாறு ஆலோசனை வழங்கினார். அதாவது மிர்ஸா சாஹிப் அவர்கள் தற்போது மரணித்து விட்டார்கள். இனி உங்களை எவரும் பாதுகாக்க முடியாது. எனவே அஹ்மதிய்யத்தை விட்டு விடுங்கள். மேலும் எங்களிடம் வந்து எங்களுடன் இணைந்து கொள்ளுங்கள். ஆனால் அவர்களுக்கு இது தெரியாது. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடம், நான் உம்முடனும், உனது அனைத்து அன்பர்களுடன் இருக்கின்றேன் என்று அல்லாஹ் செய்த அந்த வாக்குறுதிகளின் பொலிவை அவர்களின் கண்கள் காண முடியாததாக இருந்தது.

(அல் ஹகம் தொகுதி 11 எண் 46, 24 டிசம்பர் 1907 பக்கம் 4)

அல்லாஹ் அன்னாரிடம் இல்ஹாம் மூலமாக கூறினான். அன்னாருக்குப் பிறகு அன்னாரின் கிலாஃபத் தொடர் ஆரம்பமாகும் என்று அல்லாஹ் வாக்குறுதி அளித்து அன்னாருக்கு ஆறுதல் வழங்கியிருந்தான். வாக்குறுதிகளும் முன்னறிவிப்புகளும் நிச்சயமாக முழுமை பெறும் என்று அல்லாஹ் கூறியிருந்தான். நபிமார்களின் இந்த ஜமாஅத் இரண்டாம் வல்லமையை பார்க்கின்றது என்று அன்னார் தெளிவுபடுத்தியிருந்தார்கள். இங்கு நபி என்ற உதாரணத்தை கூறி இந்த விஷயத்தை தெளிவுபடுத்தி

**நபிமொழியிலிருந்து...**

சொர்க்கத்தின் வாசல்களில் ஒரு வாசலின் பெயர் தர்மத்தின் வாசல் ஆகும். தான, தர்மங்கள் செய்யக்கூடியவர்கள் அதன் வழியாக நுழைவர். (முஸ்லிம்)

S.S.H.Muhammed Lebbai
(Sec.Taleem, Melapalayam)

இருக்கின்றார்கள். அதாவது பலவீனமான சில அஹ்மதிகள் சில முறை ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் நபியாக இருந்தார்கள் என்பதைக் கூறுவதற்கு தயங்குகின்றார்கள். அவர்களுக்கும் இங்கு பதிலளிக்கப்பட்டுள்ளது.

எனது ஜமாஅத் நபியின் ஜமாஅத் ஆகும். மேலும் நான் நபி ஆவேன் என்று ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களே கூறியுள்ளார்கள். மேலும் நபிமார்களின் ஜமாஅத் இரண்டாம் வல்லமையை பார்க்கின்றது. எனவே உங்களில் எவர் ஈமானில் நிலைபெற்றிருப்பாரோ நற்செயல்கள் செய்வாரோ அவர் நிச்சயம் இரண்டாம் வல்லமையை கண்டு கொள்வார்.

எனவே ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இரண்டாம் வல்லமை நிலைபெறுவது தொடர்பாக இவ்வாறு கூறுகின்றார்கள்:

சுருக்கமாக, இறைவன் இரு விதமான வல்லமையை வெளிப்படுத்துகின்றான். முதலாவதாக, நபிமார்களின் கைகளாலேயே தனது வல்லமையின் தரத்தை காட்டுகின்றான். இரண்டாவதாக, ஒரு நபி மரணிக்கின்ற தருணத்தில் அந்த நபியின் மரணத்திற்குப் பிறகு (அவரைப் பின்பற்றுபவர்கள்) துன்பங்களை எதிர்கொள்ளும் நிலை உருவாகின்றது. எதிரிகள் வலுப்பெற்று இப்போது பணி சீர்குலைந்து விட்டது என கருதுகின்றனர். இனி இந்த ஜமாஅத் அழிந்து விடும் என அவர்கள் உறுதியாக நம்புகின்றனர். ஜமாஅத்திலுள்ள மக்களும் சந்தேகத்தில் வீழ்ந்து விடுகின்றனர். அவர்களது இடுப்புகள் முறிந்து விடுகின்றன. பாக்கியமிழந்த பலர் மார்க்கத்தை விட்டு விலகி விடுகின்றனர்.

அப்போது இறைவன் தனது இரண்டாம் வல்லமையை இரண்டாவது முறையாக வெளிப்படுத்துகின்றான். மேலும் வீழ்ந்து கிடக்கும் ஜமாஅத்தை காப்பாற்றி விடுகின்றான். எனவே கடைசி வரை பொறுமையுடன் இருப்பவர் இறைவனின் இந்த அற்புதத்தைக் காண்கின்றார். ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்களின் காலத்தில் இவ்வாறு நடந்தது. அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மரணம் ஒரு அகால மரணமாக கருதப்பட்டது. காட்டுவாசிகளான பல அறிவிலிகள் மார்க்கத்தை விட்டு வெளியேறி விட்டார்கள். நபித்தோழர்கள் கூட துக்கத்தின் காரணமாக பைத்தியக்காரர்களைப் போன்று ஆகிவிட்டார்கள். அப்போது இறைவன் ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்களை நியமித்து மீண்டும் தனது வல்லமையின் முன்மாதிரியை காட்டினான். இஸ்லாம் அழிந்து கொண்டிருக்கும் வேளையிலேயே அதனை காப்பாற்றி விட்டான்.

وَلَيُمَكِّنَنَّ لَهُمْ دِينَهُمُ الَّذِي ارْتَضَىٰ لَهُمْ وَلَيُبَدِّلَنَّهُم مِّن بَعْدِ خَوْفِهِمْ أَمْنًا

பொருள்: அவன் அவர்களுக்காக விரும்பிய அவர்களின் மார்க்கத்தில் அவர்களை உறுதியாக நிலைபெறச் செய்தான். அவர்களது அச்சத்தின் நிலையை மாற்றி அதற்குப் பிறகு அமைதியினை வழங்குவான் (24:56) என்று அவர்களிடம் செய்த வாக்குறுதியை இறைவன் முழுமை செய்தான்.

(அல் வஸிய்யத், ரூஹானி கஸாயின் தொகுதி 20 பக்கம் 304,305)

மேலும் அன்னார் கூறுகின்றார்கள்: எனவே அன்பிற்குரியவர்களே! ஆரம்பத்திலிருந்தே அல்லாஹ்வின் நடைமுறை இதுதான். அவன் எதிரிகளின் இரண்டு பொய்யான மகிழ்ச்சிகளை அழித்துக் காட்டுவதற்காக இரண்டு வல்லமைகளை காட்டுகின்றான். எனவே இப்போது இறைவன் தனது பழமையான அந்த நடைமுறையை விட்டு விடுவது சாத்தியமில்லை.

எனவே நான் உங்களுக்கு எடுத்துக் கூறியிருக்கின்ற விஷயங்களில் வருத்தப்படாதீர்கள். உங்கள் உள்ளம் கவலையடைய வேண்டாம். ஏனெனில் அந்த இரண்டாவது வல்லமையை காண்பதும் உங்களுக்கு அவசியமாகும். மேலும் அது வருவது உங்களுக்கு சிறந்ததாகும். ஏனெனில் அது நிரந்தரமானதாகும். அதன் தொடர் மறுமை வரை அறுந்து விடாது. மேலும் நான் செல்லாத வரை அந்த இரண்டாவது வல்லமை வர முடியாது. ஆனால் நான் சென்று விட்டால் இறைவன் உங்களுக்காக அந்த இரண்டாவது வல்லமையை அனுப்புவான். அது எப்பொழுதும் உங்களுடன் இருக்கும். இறைவனின் வாக்குறுதி பராஹீனே அஹ்மதிய்யாவில் (குறிப்பிடப்பட்டு) உள்ளது. மேலும் அவ்வாக்குறுதி என்னைப்பற்றி அல்ல. மாறாக, உங்களைப் பற்றியதாகும். நான் உம்மைப் பின்பற்றும் உமது ஜமாஅத்தை மறுமை வரை மக்களிடமிருந்து மேலோங்கச் செய்வேன் என இறைவன் கூறியுள்ளான்.

எனவே என்னைப் பிரியும் நாள் உங்களுக்கு வர வேண்டியது அவசியமாகும். அதற்குப் பிறகு நிரந்தரமான வாக்குறுதிகளுக்கான அந்த நாள் வரும். நமது இறைவன் வாக்குறுதிகளில் உண்மையானவனும், நன்றியுள்ளவனும், உண்மையாளனும் ஆவான். அவன் வாக்குறுதி அளித்த எல்லாவற்றையும் உங்களுக்கு காட்டுவான். இந்த நாட்கள் உலகத்தின் கடைசி நாட்களாகும். பல துன்பங்கள் இறங்கும் காலமாகும். ஆனாலும் இறைவன் தெரிவித்திருக்கின்ற செய்திகள் அனைத்தும் நிறைவேறும் வரை இந்த உலகம் நிலைபெற்று இருக்கும்.

நான் இறைவன் புறமிருந்து ஒரு வல்லமையாக வெளிப்பட்டுள்ளேன். நான் இறைவனின் வல்லமையின் தோற்றம் ஆவேன். மேலும் எனக்குப் பிறகு இன்னும் சிலர் தோன்றுவார்கள். அவர்கள் இறைவனின் இரண்டாவது வல்லமையின் தோற்றமாக இருப்பார்கள். எனவே நீங்கள் இறைவனுடைய இரண்டாவது வல்லமையை எதிர்பார்த்தவாறு ஒன்றுசேர்ந்து துஆ செய்து கொண்டிருங்கள். ஒவ்வொரு நாட்டிலும் ஒவ்வொரு நல்லவர்களின் ஜமாஅத்தும் ஒன்றுகூடி துஆ செய்து கொண்டிருக்க வேண்டும்.

(அல் வஸிய்யத், ரூஹானி கஸாயின் தொகுதி 20 பக்கம் 305,306)

எனவே ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் முன்னறிவிப்பிற்கேற்பவும் அல்லாஹ் அன்னாருடன் செய்த வாக்குறுதிக்கேற்பவும் கடந்த 113 ஆண்டுகளாக அல்லாஹ்வின் அருட்கள் சொல்லுக்கு சொல் முழுமையாக நிறைவேறுவதை நாம் பார்த்து வருகின்றோம். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் மரணத்தின்போது இனி ஜமாஅத் அழிந்து விட்டது என்று கூறிய மக்களுக்கு தற்போது கூறுவதற்கு ஒன்றும் இல்லை. இனி இவர்களை பாதுகாப்பவர் எவரும் இல்லை என்ற விஷயங்கள் எல்லாம் பொய்யாகி விட்டன.

பின்னர் தற்போது மிர்ஸாயிகளிடம் என்ன இருக்கின்றது? அவர்களின் தலை வீழ்ந்து விட்டது என்று ஹஸ்ரத் முதலாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் கலீஃபா ஆன பிறகு கர்ஸன் கெஸட் என்ற பத்திரிகை எழுதியது:

மேலும் அவர்களின் இமாமாக ஆகி இருக்கின்ற ஒரு நபரால் எதுவும் செய்ய முடியாது. ஆயினும் அவர் உங்களுக்கு பள்ளிவாசலில் திருக்குர்ஆன் ஓதிக் கொடுப்பார். இதைத்தவிர அவரால் வேறு எதுவும் செய்ய முடியாது என்று எழுதியது.

இந்த ஒரு பணி எவ்வளவு மகத்தான பணி என்றால் அதனை செய்வதற்காக ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்கள் தனது சந்ததிகளில் ஒரு மகத்தான நபி தோன்றுவதற்காக துஆ

செய்திருந்தார்கள். மேலும் இந்த ஒரு மகத்தான ஷரீஅத்தை எடுத்துக் கொண்டு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் தோன்றியிருந்தார்கள். மேலும் இந்த ஒரே ஒரு முழுமையான வேதத்தை கற்பவரும், கற்பிப்பவரும் உலகிலும், மறுமையிலும் வெற்றி பெறுகின்றார்கள். இதே வேதத்தின் போதனைகளை பரப்புவதற்காகவே ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தோன்றியிருந்தார்கள். இதே பணியை செய்வதற்கே கிலாஃபத் எனும் அமைப்பு நிலை பெற்றுள்ளது. ஆனால் இந்த அறிவின் குருடர்களுக்கு இது பற்றி என்ன தெரியும். எவ்வாறிருப்பினும் ஹஸ்ரத் முதலாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் இவ்விஷயங்களைக் கேட்டு விட்டு, நான் உங்களுக்கு திருக்குர்ஆன் மட்டுமே கற்பித்துக் கொண்டிருக்க இறைவன் அருள் செய்வானாக என்று கூறினார்கள்.

(பத்ர், காதியான் 7 ஜனவரி 1909, தொகுதி 8 இதழ் எண் 10 பக்கம் 5)

இந்தப் பணியை ஹஸ்ரத் முதலாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் செய்தார்கள். மிகவும் சிறப்பாக செய்தார்கள்.

இனி ஜமாஅத்தில் நிர்வாக பலவீனங்கள் உருவாகி விடும் என்றும், ஜமாஅத்தின் ஒற்றுமை சங்கிலி சிதறிவிடும் என்றும் எதிரி எண்ணிக் கொண்டிருந்தான். அந்த எதிரிக்கு வெறும் ஏக்கம் மட்டுமே எஞ்சியது. ஹஸ்ரத் முதலாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் நயவஞ்சகர்கள் மற்றும் அஞ்சுமனைச் சார்ந்த சில தலைவர்களின் குழப்பங்களை எந்த அளவிற்கு கடுமையாக கட்டுப்படுத்தினார்கள் என்றால் எந்த வகையிலும் ஏதாவது தீங்கிழைப்பதற்கு எவருக்கும் தைரியம் வரவில்லை. உங்களின் இயல்பின் திசை எந்தத் திசையில் இருந்தாலும் இனி எனது கட்டளைகளுக்கு நீங்கள் கீழ்ப்படிந்து நடக்க நேரிடும் என்று அன்னார் தனது கிலாஃபத்தின் முதல் சொற்பொழிவில் கூறினார்கள்.

(பத்ர், காதியான் 2 ஜூன் 1908, இதழ் எண் 22 தொகுதி 7 பக்கம் 8)

பின்னர் அன்னார் ஒரு சந்தர்ப்பத்தில் முபாரக் பள்ளிவாசலில் மிகவும் கம்பீரமாக சொற்பொழிவாற்றியவாறு இவ்வாறு கூறினார்கள்: நீங்கள் உங்களது செயல்களால் எனக்கு எந்த அளவிற்கு துன்பம் தந்துள்ளீர்கள் என்றால் நான் நீங்கள் கட்டிய பள்ளிவாசலின் இந்த பகுதியில் நிற்கவில்லை. மாறாக, நான் எனது மிர்ஸாவின் பள்ளிவாசலில் நிற்கின்றேன். (அதாவது ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் காலத்தின் தொடக்கத்தில் கட்டப்பட்ட பள்ளிவாசலின் பகுதியில் அன்னார் நின்று கொண்டிருந்தார்கள். அதன் பிறகு ஜமாஅத்தின் சந்தாவால் விரிவாக்கம் செய்யப்பட்ட அந்த பகுதியில் அவர்கள் நிற்கவில்லை.)

அன்னார் கூறினார்கள்: நான் அங்கு கூட நிற்கவில்லை. நான் பள்ளிவாசலின் அசல் பகுதியில் அதாவது ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் காலத்தில் கட்டப்பட்ட இடத்தில் நிற்கின்றேன். அல்லது அன்னாரின் தொடக்க காலத்தில் கட்டப்பட்ட இடத்தில் நிற்கின்றேன்.

அன்னார் தொடர்ந்து கூறினார்கள்: சமுதாயமும், அஞ்சுமன் என்ற அமைப்பும் இரண்டும் கலீஃபாவிற்கு கட்டுப்பட்டதாகும். இவ்விரண்டும் கலீஃபாவின் கீழ் செயல்படக்கூடியதாகும். அதாவது அஞ்சுமன் அமைப்பும், ஏற்றுக் கொண்டவர்களும் (அஹ்மதிகளும்) இவ்வனைவரும் தொண்டவர்கள் ஆவர். அஞ்சுமன் ஆலோசனை வழங்கக்கூடியதாகும். ஆயினும் ஆலோசகர் என்ற ரீதியில் அஞ்சுமனிடமிருந்து ஆலோசனை பெறப்படுகின்றது. இந்த ஆலோசனையும் அவசியமான விஷயமாக உள்ளது.

இதேபோன்று அன்னார் கூறினார்கள்: கலீஃபாவின் பணி பைஅத் வாங்குவது மட்டும் தான். உண்மையான ஆட்சியாளர் அஞ்ஜுமன் தான் என்று எந்த நபர் எழுதியுள்ளாரோ அவர் தவ்பா செய்து கொள்ளட்டும். இறைவன் எனக்கு செய்தி வழங்கியுள்ளான். இந்த ஜமாஅத்திலிருந்து ஒருவர் உம்மை விட்டு விட்டு முர்தர் ஆகி விடுவார் என்றால் நான் அவருக்கு பகரமாக உமக்கு ஒரு ஜமாஅத்தை வழங்குவேன்.

அடுத்து அன்னார் கூறினார்கள்: கலீஃபாவின் பணி வெறும் தொழ வைப்பதும், நிக்காஹ் நடத்துவதும் அல்லது பைஅத் வாங்குவது மட்டும் தான் என்று கூறப்படுகின்றது. இந்த பணியை ஒரு முல்லா கூட செய்ய முடியும். அதற்கு கலீஃபாவின் அவசியம் என்ன வந்து விட்டது? இதற்கு எந்தவொரு கலீஃபாவின் அவசியமும் இல்லை.

அன்னார் கூறினார்கள்: அந்த பணிகளை செய்வதற்கு ஒரு கலீஃபாவின் அவசியம் இல்லை. நான் இதுபோன்ற பைஅத்துகளின் மீது உமிழ்வது கூட கிடையாது. முழுமையாக கட்டுப்படுவதும், கலீஃபாவின் எந்தவொரு கட்டளைக்கும் மாறு செய்யாமல் இருப்பதும் தான் பைஅத் ஆகும்.

(தாரீகே அஹ்மதிய்யத் தொகுதி 3 பக்கம் 262)

எனவே இந்த சொற்பொழிவு எங்கு நயவஞ்சகர்களின் சதித்திட்டங்களை முறியடித்து தோல்வியுறச் செய்ததோ அங்கு எதிரிகளின் வாயையும் அடைக்கச் செய்தது. எந்த நபரை முதியவர், பலவீனமான மனிதர் என்று கருதினார்களோ அந்த நபர் இறைவனின் உதவியால் பேசினார். அதுவும் எப்படி பேசினார் என்றால் அனைவரும் வாயடைத்து விட்டனர். குறை பேசக்கூடியவர்கள் தனது முகத்தை மறைத்துக் கொண்டனர். ஜமாஅத்தின் கலப்பற்ற தன்மை கொண்ட நபர்கள் ஒரு புதிய உறுதியுடன் பைஅத்திற்கான உடன்படிக்கையை செய்தனர். அதன் பிறகு ஜமாஅத் முன்னேற்றத்தை நோக்கி பயணம் மேற்கொண்டதை உலகம் கண்டு கொண்டது.

பின்னர் 1914 ஆம் ஆண்டு மார்ச் மாதம் ஹஸ்ரத் முதலாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களின் மரணம் நிகழ்ந்தது. அப்போது ஜமாஅத்தில் மீண்டும் ஒரு பூகம்பத்தின் சூழல் உருவானது. அஞ்சுமனைச் சார்ந்த சில தலைவர்கள் அஞ்சுமன் அமைப்புதான் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் அசல் பிரதிநிதி என்ற கருத்தை மக்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பதில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர். அவர்கள் முன்னர் முதலாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்களின் காரணமாக மௌனமாக இருந்தார்கள். தற்போது மீண்டும் தலை தூக்கினார்கள். இதேபோன்று நயவஞ்சகர்களும் தலை தூக்குவதற்கு முயற்சி செய்தனர்.

ஆனால் அல்லாஹ்வின் உதவி மற்றும் ஒத்தாசையின் தரம் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடம்

O.A. NIJAM 99947 57172 V.A. SAIT 99430 30230

O.A.N. DOORS & STEELS



All Types of wooden Doors, Skin Doors Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Construction Chemicals.

5C/6-A, Ambai Road, Kulavanikarpuram,
(opp. Karuna Clinic) Tirunelveli - 627 005.

செய்யப்பட்ட வாக்குறுதிக்கேற்ப கிலாஃபத்தின் அரியணையை பாதுகாக்கும் காரணியாக அமைந்தது. ஹஸ்ரத் மிர்ஸா பஷீருத்தீன் மஹ்மூத் அஹ்மத் (ரலி) அவர்களை அடுத்த கலீஃபாவாக தேர்ந்தெடுத்து விடும் என்ற அபாயம் அஞ்சுமனைச் சார்ந்த சில தலைவர்களுக்கு இருந்தது. எனவே கலீஃபா தேர்ந்தெடுக்கப்படக்கூடாது என அவர்கள் கருதினர். எப்படியாவது அந்த விஷயம் தவிர்க்கப்பட வேண்டும். அது சிறிது காலத்திற்கு தள்ளி வைக்கப்பட்டாலும் சரியே என்று அவர்கள் விரும்பினர். என்ன ஆனாலும் கலீஃபா தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்று ஹஸ்ரத் மிர்ஸா பஷீருத்தீன் மஹ்மூத் அஹ்மத் (ரலி) அவர்கள் தெளிவாக கூறினார்கள்.

ஆயினும் அத்துடன் இந்த விஷயத்தையும் தெளிவுபடுத்தி இருந்தார்கள். நான் கலீஃபா ஆக வேண்டும் என்று எனக்கு எந்த விருப்பமும் இல்லை. நீங்கள் யாரை விரும்புகின்றீர்களோ அவரை கலீஃபாவாக ஆக்கிக் கொள்ளுங்கள். நானும், எனது முழு குடும்பமும் உண்மையான உள்ளத்துடன் அவரிடம் பைஅத் செய்து விடும் என்று அன்னார் மிகவும் தெளிவுபடக் கூறியிருந்தார்கள்.

ஆனால் மாபெரும் அறிவாளிகளாக தங்களைத் தாங்களே அந்த மக்கள் கருதி இருந்தனர். தீர்ப்பு அவருக்கு சாதகமாகவே இருக்கும் என்ற அபாயம் அவர்களுக்கு இருந்தது. அதிகாரத்தை மட்டுமே விரும்பக் கூடியவர்கள் இந்த விஷயத்தை ஏற்கவில்லை. ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் ஹஸ்ரத் மிர்ஸா பஷீருத்தீன் மஹ்மூத் அஹ்மத் (ரலி) அவர்கள், நீங்கள் நியமிக்கும் எவரிடமும் நான் பைஅத் செய்வதற்கு தயாராக இருக்கின்றேன். எந்நிலையிலும் கலீஃபா தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்று கூறியபோது அவர்கள் இந்த விஷயத்தை ஏற்கவில்லை.

எவ்வாறிருப்பினும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் உயிலுக்கேற்ப நம்பிக்கையாளர்களின் ஜமாஅத் நூர் பள்ளிவாசலில் ஒன்றுகூடி இருந்தது. ஏறக்குறைய சுமார் 2000 அல்லது அதை விட அதிகமான மக்கள் இருந்தனர். அனைவரும் ஹஸ்ரத் மிர்ஸா பஷீருத்தீன் மஹ்மூத் அஹ்மத் (ரலி) அவர்களை தமது கலீஃபாவாக தேர்ந்தெடுத்துக் கொண்டனர். மக்கள் ஒருவரையொருவர் முந்தி அடித்துக் கொண்டு பைஅத் செய்வதற்காக முன்னேறிக் கொண்டிருந்தனர். அல்லாஹ்வின் இந்த தேர்ந்தெடுப்பில் பைஅத் செய்ய மலக்குகள் மக்களை பிடித்து கொண்டு வந்ததைப் போன்று இருந்ததாக பார்த்தவர்கள் எழுதுகின்றார்கள்.

(ஸில்ஸிலா அஹ்மதிய்யா தொகுதி 1 பக்கம் 330, 331)

இறுதியில் இந்த அனைத்தையும் கண்ட அஞ்சுமன் அமைப்பைச் சார்ந்த சில தலைவர்கள், அவர்களில் பெரும் பெரும் மக்கள் சிலராகவே இருந்தனர். அவர்கள் அஞ்சுமனின் முழு கருவூலத்தையும் எடுத்துக் கொண்டு அங்கிருந்து மறைந்து விட்டனர். ஆனால் அஹ்மதிய்யா கிலாஃபத் மூலமாக அல்லாஹ் ஜமாஅத்திற்கு எவ்வாறு வலிமை வழங்கினான் என்பதை இந்த உலகம் கண்டு கொண்டது.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களின் 52 வருட கிலாஃபத் காலகட்டம் இந்த விஷயத்திற்கு சாட்சியாக உள்ளது. இறைவன் கிலாஃபத்தின் பணிகளை அந்த இளைஞனிடம் ஒப்படைத்தான். அவர் மிக வேகமாக பணியாற்றி ஜமாஅத்தை அழைத்துக் கொண்டு முன்னேற்றங்களின் படிகளை தாண்டியவாறு முன்னேறிக் கொண்டே சென்றார். அஞ்சுமன் கருவூலத்தை காலியாக்கி விட்டு அந்த மக்கள் சென்றனர். இனி காதியானில் கிறிஸ்துவர்களின் ஆட்சி நிலைபெறும் என்று வாதம் செய்தனர். இன்று அவர்களின் சந்ததிகள் இந்த காட்சிகளை பார்த்துக் கொண்டிருப்பதை நாம் கண்டு கொண்டிருக்கின்றோம்.

அதாவது அல்லாஹ்வின் உதவி ஒத்தாசைகளை பெற்றிருக்கின்ற அஹ்மதிய்யா கிலாஃபத் மூலமாக முஹம்மதிய்ய மஸீஹின் கொடியின் கீழ் கிறிஸ்தவர்கள் ஒன்றுகூடுவதை வெளிப்படுத்திக் கொண்டிருக்கிறது. உலகின் எண்ணற்ற நாடுகளில் ஜமாஅத்தின் மிஷனை ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் திறந்தார்கள். ஆஃப்ரிக்காவில் கிறிஸ்துவ மத போதகர்களுக்கு அஹ்மதி முபல்லிக்களுக்கு முன்னால் நிர்பதற்கு துணிவில்லாமல் போனது. கடைசியில் கிறிஸ்துவம் பரவுவதில் அஹ்மதிய்யத் ஒரு மாபெரும் தடையாக உள்ளது என்பதை அவர்களுக்கு ஒப்புக் கொள்ள நேரிட்டது. மேலும் அது பற்றி அவர்களின் அறிக்கையில் குறிப்பும் உள்ளது.

சுருக்கமாக, நாம் பார்க்கின்றோம். காதியான் மீது தாக்குதல் தொடுப்பதற்கான திட்டமாக இருக்கட்டும். அல்லது தப்லீக் மைதானமாக இருக்கட்டும். அல்லது ஹிஜ்ரத்தின் நேரமாக இருக்கட்டும் ஒவ்வொரு தருணத்திலும் உறுதிமிக்க கலீஃபா ஜமாஅத்தின் கப்பலை அல்லாஹ்வின் உதவி ஒத்தாசையுடன் வெற்றியின் படித்தரங்களை சென்றடையச் செய்தார். மேலும் ஜமாஅத்தை பாதுகாத்தார்.

இறுதியில் இறை நியதிக்கேற்ப 1965 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் மரணம் அடைந்தார்கள். அப்போது அல்லாஹ்வின் வாக்குறுதிக்கேற்ப அல்லாஹ் இரண்டாவது வல்லமையின் மூன்றாவது தோற்றத்தை வெளிப்படுத்தினான். பின்னர் மீண்டும் அச்சத்திலிருந்து அமைதியின் பக்கம் ஜமாஅத்தை அல்லாஹ் கொண்டு வந்தவாறு ஹஸ்ரத் மிர்ஸா நாஸிர் அஹ்மத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களிடம் ஜமாஅத்தை ஒன்று கூட்டி விட்டான்.

பின்னர் ஜமாஅத் முன்னேற்றத்தின் படித்தரங்களை கடக்கத் துவங்கியது. ஆஃப்ரிக்காவில் பள்ளிக்கூடங்களையும், மருத்துவமனைகளையும் உருவாக்கும் புதிய ஒரு காலகட்டம் ஆரம்பமானது. ஆஃப்ரிக்காவில் அஹ்மதிய்யத்தின் அறிமுகத்திற்கான புதிய ஒரு காலகட்டம் துவங்கியது. உலகில் அஹ்மதிய்யத்தின் அறிமுகம் அதிகரிக்கத் தொடங்கியது. ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்கள் ஆஃப்ரிக்காவின் சில நாடுகளில் முதல் முறையாக சுற்றுப்பயணம் செய்தார்கள். அதனால் அசாதாரண தாக்கங்கள் தென்படத் தொடங்கின. ஆப்ரிக்காவின் நாடுகளில் ஒரு கலீஃபா சுற்றுப்பயணம் செய்வது இதுவே முதல் முறையாக இருந்தது. அதனை ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்கள் செய்தார்கள்.

1974 ஆம் ஆண்டில் அப்போதைய அரசாங்கம் அஹ்மதிகளுக்கெதிராக மிகக் கடுமையான திட்டங்களை தீட்டி அஹ்மதிகள் முஸ்லிம்கள் இல்லை என்ற சட்டத்தை நிறைவேற்றியது. அப்போது கிலாஃபத் என்ற கேடயத்திற்கு பின்னால் ஜமாஅத் நின்று கொண்டு இந்த அபாயகரமான தாக்குதல்களிலிருந்து ஜமாஅத்

### திருக்குர்ஆனிலிருந்து...

(செவியேற்பவரே!) இப்ராஹீம் இவ்வாறு கூறிய நேரத்தை (நினைத்துப் பாரும்). என் இறைவா! இந்த (மக்கா) நகரத்தை அமைதிக்குரியதாக்கி வைப்பாயாக. நாங்கள் பொய் தெய்வங்களை வணங்குவதிலிருந்து என்னையும், என் சந்ததிகளையும் காப்பாயாக. (14:36)

A.Basheer Ahmad
(Naib Sec.Maal, Melapalayam)

வெற்றியுடன் வெளியேறியது. மேலும் ஜமாஅத்தின் வெற்றியை தடுத்து நிறுத்துகின்ற எதிரியின் முயற்சி தோல்வியுற்றது. ஜமாஅத்தின் கரங்களில் பிச்சைப் பாத்திரத்தை ஏந்தச் செய்ய வேண்டும் என்ற எதிரியின் ஆசை மண்ணாகிப்போனது.

அல்லாஹ் பொருளாதார அபிவிருத்திக்கான புத்தும்புது வழிகளை ஜமாஅத்திற்கு திறந்து கொடுத்தான். அஹ்மதிகளையும் ஜமாஅத் உறுப்பினர்களையும் பொருளாதார ரீதியில் முற்றிலும் செயலிழக்கச் செய்யப்பட்டது. அல்லது அவர்களை தீர்த்துக்கெட்ட வேண்டுமென முயற்சி செய்யப்பட்டது. ஆனால் அந்த மக்களுக்கு (அஹ்மதிகளுக்கு) அல்லாஹ் பொருளாதார செழிப்பையும் வழங்கினான். பின்னர் அந்த கஷ்டங்களிலிருந்து வெளி வருவதற்கான வழிகளையும் திறந்து கொடுத்தான்.

எனவே எந்த மக்கள் 1974 ஆம் ஆண்டுக்குப் பிறகு நாட்டை விட்டு வெளியேறி ஜெர்மனியிலும், வேறு சில இடங்களிலும் வந்தார்களோ அவர்களுக்கு பொருளாதார செழிப்பு கிடைத்துள்ளது. எதிரி எவ்வாறு முயற்சி செய்தான்? பின்னர் கிலாஃபத்தின் நிழலின் கீழ் இருந்ததால் அல்லாஹ் அவர்களுக்கு புதுப்புது வழிகளை எவ்வாறு திறந்து கொடுத்தான்? மேலும் முன்பை விட அதிகமாக, ஆயிரம் மடங்கு அதிகமாக பொருளாதார செழிப்பை அல்லாஹ் எவ்வாறு வழங்கினான்? என்பதை அவர்கள் தமது சந்ததிகளுக்கும், பிள்ளைகளுக்கும் எடுத்துரைக்க வேண்டும்.

பிறகு 1982 ஆம் ஆண்டு ஜூன் மாதம் ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்களும் நம்மை விட்டு பிரிந்தார்கள். அப்போது அல்லாஹ் தனது வாக்குறுதிக்கேற்ப ஹஸ்ரத் மிர்ஸா தாஹிர் அஹ்மத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்கள் மூலமாக ஜமாஅத்தின் அச்சத்தை அமைதியில் மாற்றினான். எதிரி ஜமாஅத்தின் முன்னேற்றத்தைக் கண்டு அப்போது சுய நினைவை இழந்திருந்தான். அவன் புது வழிமுறையில் தாக்குதல் நடத்த திட்டம் தீட்டினான். அஹ்மதிய்யா கிலாஃபத்தினை செயலிழக்கச் செய்திட வேண்டும் என்று முயற்சி செய்தான். இங்கு எதிரி தமது வட்டத்தில் தலையை துண்டிப்பதற்கு முயற்சி செய்தான்.

ஆனால் அந்த அறிவீனர்களுக்கும், அறிவின் குருடர்களுக்கும் அல்லாஹ்வின் திட்டங்கள் என்ன? என்பது பற்றி என்ன தெரியும். அசாதாரண உதவி மற்றும் ஒத்தாசையுடன் அல்லாஹ் ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்களை பாகிஸ்தானிலிருந்து ஹிஜ்ரத் செய்ய வைத்தான். எதிரி அசந்து விட்டான். பின்னர் ஹிஜ்ரத்திற்குப் பிறகு நான்காவது கிலாஃபத் காலகட்டத்தில் முன்னேற்றத்திற்கான ஒரு புதிய காலம் ஆரம்பமானது. செயற்கைகோள் மூலமாக காலத்தின் கலீஃபாவும், உண்மை இஸ்லாத்தின் தூதுச் செய்தியும் அஹ்மதிகளின் வீடுகளுடன் அந்நியர்களின் வீடுகளுக்கும் எல்லா நாட்டிலும் சென்றடைய தொடங்கியது. தப்லீக்கிற்கான புதிய வழிகள் திறந்தன. பல நாடுகளில் அஹ்மதிய்யத் நிலைநாட்டப்பட்டது. உண்மை இஸ்லாத்தின் போதனைகள் பரவத் தொடங்கின. முன்பை விட அதிகமாக திருக்குர்ஆன் பரப்பப்பட்டது. அதன் மொழியாக்கம் புதுப்புது மொழிகளில் வெளியாகத் துவங்கின.

பின்னர் இறை நியதிக்கேற்ப 2003 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்களின் மரணம் நிகழ்ந்தது. அப்போது மீண்டும் ஜமாஅத்திற்கு ஒரு மாபெரும் துன்பம் ஏற்பட்டது. எதிரியின் எண்ணத்தின்படி அது அஹ்மதிய்யத்தை அழிப்பதற்கு ஒரு பெரும் வாய்ப்பாக அவர்களுக்கு அமைந்திருந்தது. ஆனால் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடம் அல்லாஹ் வாக்குறுதி அளித்திருந்தான். அவன் மீண்டும் ஒரு முறை ஜமாஅத்தை பாதுகாத்தான்.

அவன் எவ்வாறு பாதுகாத்தான் என்றால், எதிர் தரப்பைச் சார்ந்த மவ்லவிகளும் இவ்வாறு கூறத் தொடங்கி விட்டனர். நாங்கள் உங்களை உண்மையாளர்களாக கருதவில்லை. எனினும் அல்லாஹ்வின் செயல் சாட்சியங்கள் உங்களுக்கு ஆதரவாக இருப்பதை நாங்கள் கண்டு வருகிறோம். இறைவனின் செயல் சாட்சியங்கள் நமக்கு ஆதரவாக இருக்கின்ற என்பதை அவர்கள் ஒப்புக் கொண்டிருந்தபோதிலும் உண்மையை ஏற்பதற்கு அவர்கள் தயாராக இல்லை. நம்பிக்கையாளர்களின் துஆக்களை அல்லாஹ் செவிமடுத்தான். அச்சத்தின் நிலையை அவன் அமைதியில் மாற்றினான். இஸ்லாத்தின் வரலாற்றில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மூலமாக ஐந்தாவது கிலாஃபத் காலகட்டம் ஆரம்பமானது.

இஸ்லாத்தின் ஆரம்ப காலத்தில் கிலாஃபத்தே ராஷிதா (நேர்வழி பெற்ற கிலாஃபத்) நான்கு கிலாஃபத்கள் வரையே நிலைபெற்றது. அதுவும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முன்னறிவிப்பிற்கேற்பவே இருந்தது. தற்போது ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மூலமாக ஆரம்பமாகியுள்ள ஐந்தாவது கிலாஃபத்தும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முன்னறிவிப்பிற்கேற்பவே அமைந்துள்ளது. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் வருகைக்குப் பிறகு இஸ்லாத்தின் வரலாற்றில் ஏராளமான புதிய அத்தியாயங்கள் திறக்கப்பட்டுள்ளன. அதில் ஓர் அங்கமாக ஐந்தாவது கிலாஃபத்தும் உள்ளது. இனி ஜமாஅத்தின் தலைமைத்துவம் அவ்வளவு பாதுகாப்பான கரங்களில் இல்லை என்று எதிரி நினைத்திருந்தான். ஆனால் அசல் கரம் என்பது அல்லாஹ்வின் கரமாகும். அவனது உதவியின் கரம் எவருக்கு ஆதரவாக இருக்குமோ அது அவரை வலிமைப்படுத்தி விடும் என்பது எதிரிக்கு என்ன தெரியும்?.

இன்று எதிரியின் பொறாமையின் கண்கள் முன்பை விட அதிகமாக ஜமாஅத்தின் முன்னேற்றங்களை கண்டு கொண்டிருக்கின்றன. உலகில் ஜமாஅத்தின் அறிமுகம் அசாதாரண முறையில் இக்காலகட்டத்தில் எல்லா பிரிவினருக்கு மத்தியிலும், எல்லா மட்டத்திலும் அசாதாரண முறையில் ஏற்பட்டுள்ளது. இது மிகவும் அசாதாரணமான ஒன்றாகும்.

**நான் மிகவும் பலவீனமான ஒரு மனிதன் ஆவேன். எனது எந்த சிறப்பின் காரணமாகவும் இந்த முன்னேற்றம் ஏற்படவில்லை. இன்று உலக அரசாங்கங்களின் தலைவர்களுக்கும், பாராளுமன்றங்களிலும் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் அறிமுகம் ஏற்பட்டு வருகின்றது. இது அல்லாஹ்வின் அருட்கள் மற்றும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடம் அல்லாஹ் செய்துள்ள வாக்குறுதிகளின் காரணமாக மட்டுமே நடந்து வருகின்றது.**

திருக்குர்ஆனிலிருந்து...

அவர்கள் இரவு நேரத்தில் குறைவாகவே துயில் கொண்டனர். (54:18)

A.Shamsul Alam (Qaid, Melapalayam)

திருக்குர்ஆனிலிருந்து...

நான் ஜின்களையும், மனிதர்களையும் என்னை வணங்குவதற்காகவே படைத்துள்ளேன். (51:57)

A.Nasir Ahmad (Ameer, Melapalayam)

**மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முன்னறிவிப்பிற்கேற்ப நடந்து வருகின்றது.**

ஒவ்வொரு நாளும் அல்லாஹ்வின் அருட்களின் காட்சிகளை நாம் கண்டு கொண்டிருக்கின்றோம். திருக்குர்ஆன் அச்சிடும் பணிகளும், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் புத்தகங்களின் பணிகளும் பல்வேறு மொழிகளில் மிகவும் அதிகரித்து விட்டன. MTA மூலமாக உலகின் அனைத்து நாடுகளிலும் இஸ்லாத்தின் உண்மையான தூதுச் செய்தி சென்றடைந்து வருகின்றது. முன்னர் ஒரு மொழியில் இருந்தது. ஒரு சேனல் இருந்தது. தற்போது உலகில் MTA–வின் 8 பல்வேறு சேனல்கள் இயங்கி வருகின்றன. உலகின் பல்வேறு நாடுகளில் MTA Studio உருவாகி விட்டது. அங்கிருந்து MTA–விற்கான பல்வேறு நிகழ்ச்சிகள் தயார் செய்யப்படுகின்றன. தற்போது Studio என்பது ஓர் இடத்தில் மட்டும் இல்லை. எல்லா இடங்களிலும் உருவாகி விட்டது. எல்லா இடங்களில் இல்லையென்றாலும் ஆப்ரிக்காவின் பல்வேறு இடங்களிலும், வட அமெரிக்காவிலும், ஐரோப்பாவிலும் உருவாகி விட்டது. நாம் நமது வசதி வாய்ப்புகளை பார்ப்போம் என்றால், இதற்கான சாத்தியமே இல்லை.

சமூக ஊடகங்கள் மூலமாகவும் இஸ்லாத்தின் உண்மையான தூதுச் செய்தி சென்றடைந்து வருகின்றது. பாகிஸ்தான் அரசாங்கம், அதன் மீது பல்வேறு வழிமுறைகளில் தடைகளை விதித்துள்ளது. ஆனால் உலகின் ஏனைய நாடுகளில் முன்பை விட அதிகமாக வழிகளை அல்லாஹ் திறந்து கொடுத்து விட்டான்.

பின்னர் அல்லாஹ் கிலாஃபத்துடன் தொடர்பை நிலைநாட்டுவதற்கு ஒரு புதிய வழியை நமக்கு புரிய வைத்து விட்டான். அது Online சந்திப்பு அல்லது Virtual சந்திப்பின் மூலமாக இந்த கோவிட் நோயின் காரணத்தால் நம் முன் வெளிப்பட்டுள்ளது. இந்த வழிமுறை மூலமாக கூட்டங்களும் நடைபெறுகின்றன. சந்திப்புகளும் நடைபெறுகின்றன. இதன் மூலம் ஜமாஅத்துகளுடன் நேரடியான தொடர்பு ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றது. காலத்தின் கலீஃபாவிடமிருந்து மக்கள் நேரடியாக வழிகாட்டல் பெற்று வருகின்றனர். நான் இங்கு லண்டனிலிருந்து, சில சமயம் ஆப்ரிக்காவின் சில நாடுகளுடனும், சில சமயம் இந்தோனேஷியாவுடனும், சில முறை ஆஸ்திரோலியாவுடனும், சில முறை அமெரிக்காவுடனும் சந்திப்பு நிகழ்த்துகிறேன். ஆக இவை அனைத்தும் இறைவனின் உதவிக்கான காட்சிகளாகும்.

அல்லாஹ் தனது அருட்களால் இந்த காட்சிகளை காட்டுகின்றான். இறைவன் நமக்கு அருள் புரிந்துள்ள அருட்களில் இது ஓர் அருளாகும் என்பதையும், நாம் எப்போதும் அதற்குரிய உரிமைகளை வழங்கக்கூடியவர்களாக ஆக வேண்டும் என்பதையும் ஒருபோதும் நாம் மறந்து விடக்கூடாது. ஏனெனில் அப்போது தான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முன்னறிவிப்பிற்கேற்ப கியாமத் வரை இந்த அருட்கொடையிலிருந்து நாம் பயன் பெற்றுக் கொண்டிருக்க முடியும்.

அல்லாஹ் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடம் வாக்குறுதி அளித்துள்ளான். அல்லாஹ் தனது வாக்குறுதிகளுக்கு மாற்றம் செய்வதில்லை. ஆயினும் இதிலிருந்து பயன் பெறுவதற்காக நாம் நமது கடமையை ஆற்ற வேண்டும். அல்லாஹ்விற்கு நன்றியுள்ள அடியார்களாக மாறி அவன் முன் நாம் குனிய வேண்டும். நமது ஒவ்வொரு சொல்லிலும், செயலிலும் கிலாஃபத்தின் அருட்கொடைக்கான உணர்வு வெளிப்படுவது அவசியமாகும். கிலாஃபத்திற்கு முழுமையாக கட்டுப்படுதல் என்ற உறுதிமொழியை இறுதி மூச்சு வரை பாதுகாப்பதற்காக எல்லா வகையான தியாகத்திற்கும் தயாராக இருக்க வேண்டும். அப்போது தான் கியாமத் வரை கிலாஃபத்திற்கு கட்டுப்பட்டுப்பட்டவர்களாக நமது சந்ததிகளை ஆக்குவதற்குரிய உரிமையை நம்மால் வழங்க முடியும். எவர் ஈமானில் நிலை நின்றவாறு எல்லா தியாகங்களுக்கும் தயாராக இருப்பாரோ அவர் அல்லாஹ்வின் அருட்கொடைகளுக்கு வாரிசாகுவார் என்ற உறுதிமொழியை ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் நமக்கு வழங்கியுள்ளார்கள்.

அது தொடர்பாக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்: இறைவன் உங்களை வீணாக்கி விடுவான் என நீங்கள் ஒருபோதும் கருத வேண்டாம். நீங்கள் உண்மையில் இறைவனின் கரத்தால் மண்ணில் விதைக்கப்பட்ட விதை ஆவீர்கள். இந்த விதை முளைக்கும்; பூக்கும்; எல்லா திசையிலும் இதன் கிளைகள் படரும். பின்னர் வலுவானதொரு மரமாகி விடும் என்று இறைவன் கூறியுள்ளான். எனவே இறைவனின் வசனத்தில் நம்பிக்கை கொண்டு இடையில் ஏற்படும் சோதனைகளுக்கு அஞ்சாதவர்கள் அருளுக்குரியவர்கள் ஆவர். ஏனென்றால் சோதனைகள் வருவதும் அவசியமானதாகும். தமது பைஅத் வாதத்தில் உண்மையாளர் யார்? பொய்யர் யார்? என உங்களை சோதிக்கவே இறைவன் அவ்வாறு செய்கிறான்.

ஏதாவது சோதனையில் தடுமாற்றம் அடைபவன் இறைவனுக்கு எந்த இழப்பையும் ஏற்படுத்த மாட்டான். மேலும் பாக்கியமற்ற நிலை அவனை நரகத்திற்கு எடுத்துச் செல்லும். அவன் பிறக்காமல் இருந்தால் அது அவனுக்கு நன்றாக இருந்திருக்கும். ஆனால் எவர்கள் இறுதி வரை பொறுமையை மேற்கொள்வதுடன் துன்பங்கள் எனும் பூமி அதிர்ச்சிகளையும், ஆட்டங்காணச் செய்யும் விபத்துகள் எனும் புயல்களையும் தாங்கிக் கொண்டு, உலகில் உள்ளவர்கள் அவர்களுடன் கடுமையாக வெறுப்புடன் நடந்து கொள்வதையும், சமுதாயத்தின் ஏளனப் பேச்சையும், எள்ளி நகையாடுதலையும், இழிவையும் பொருட்படுத்தாது இருப்பார்களோ அவர்களே இறுதியில் வெற்றி பெறுவார்கள். அருட்களின் வாசல்கள் அவர்களுக்காக திறக்கப்படும்.

என் ஜமாஅத்திற்கு அறிவிக்கும்படி எனக்கு இறைவன் கூறியுள்ளதாவது, உலகப்பற்று கலவாத வஞ்சகமோ, கோழைத்தனமோ கலவாத கட்டுப்படுதலின் எத்தகுதியினையும் இழக்காத நம்பிக்கையை கொண்டவர்கள் இறைவனின் விருப்பத்திற்குரியோர் ஆவர். மேலும் அவர்களே உண்மையான பாதையில் செல்பவர் ஆவார்கள்.

(அல்வஸிய்யத், ரூஹானி கஸாயின் தொகுதி 20 பக்கம் 309)

மேலும் அன்னார் கூறுகின்றார்கள்: இறைவன் என்னிடம் இவ்வாறு கூறியுள்ளான்: பெரும் பெரும் துன்பங்கள் வரும். பல ஆபத்துகள் பூமியில் இறங்கும். அவற்றில் சில எனது வாழ்க்கையிலேயே வெளிப்படும். இன்னும் சில எனக்குப் பிறகு வெளிப்படும். மேலும் அவன் இந்த ஜமாஅத்திற்கு முழுமையான முன்னேற்றங்களை வழங்குவான். சில எனது கரத்தால் (நிகழும்). வேறு சில எனக்குப் பிறகு (நிகழும்).

(அல்வஸிய்யத், ரூஹானி கஸாயின் தொகுதி 20 பக்கம் 303, 304)

எனவே இந்த முன்னேற்றங்கள் நிச்சயம் நடைபெறும். அல்லாஹ் எப்போதும் நமக்கு உறுதிப்பாட்டை வழங்குவானாக. ஜமாஅத்தின் முழுமையான முன்னேற்றத்தின் காட்சிகளை நமது கண்களால் பார்க்கக் கூடியவர்களாக அல்லாஹ் நம்மை ஆக்குவானாக. நாம் செய்த உடன்படிக்கைகளை முழுமை செய்யக் கூடியவர்களாக அல்லாஹ் நம்மை ஆக்குவானாக. அப்போதுதான் அல்லாஹ்வின் வாக்குறுதி முழுமை அடைகின்ற காட்சிகளை நாம் நமது வாழ்க்கையிலேயே பார்க்க முடியும்.

நமது இறைவணக்கங்களும், நமது தொழுகைகளும், நமது செயல்களும் அல்லாஹ்வின் திருப்தியை பெறக்கூடியதாக இருக்கட்டுமாக. கிலாஃபத்தைப் பற்றிய சரியான புரிதலை நாம் பெறக்கூடியவர்களாக இருப்போமாக. மேலும் அது பற்றி நமது சந்ததிகளுக்கும் கூறுபவர்களாக நாம் இருப்போமாக. அப்போது தான் நமது சந்ததிகள் கியாமத் வரை இந்த அருட்கொடையிலிருந்து பயன் பெற்றுக் கொண்டே செல்ல முடியும்.

இன்று நான் துஆவிற்கு மீண்டும் கூற விரும்புகின்றேன். பாகிஸ்தானிய அஹ்மதிகளையும் துஆக்களில் நினைவில் வையுங்கள். அநீதியிழைக்கப்பட்ட அஹ்மதிகள் எங்கிருந்தாலும் சரி அவர்களை துஆக்களில் நினைவில் வையுங்கள். அநீதியிழைக்கப்பட்ட முஸ்லிம்கள் உலகில் எங்கு இருந்தாலும் சரி; பாலஸ்தீனாக இருக்கட்டும் அல்லது உலகில் வேறு எங்கு இருந்தாலும் சரி அவர்களையும் துஆக்களில் நினைவிற் கொள்ளுங்கள். அல்லாஹ் அனைவரின் கஷ்டங்களையும் அகற்றுவானாக. எளிமையை உருவாக்குவானாக.

அஹ்மதிகளாகிய அனைவருக்கும் அல்லாஹ் நற்பாக்கியம் வழங்குவானாக. அவர்கள் உண்மையான வடிவில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் போதனையின்படி செயல்படக்கூடியவர்களாக இருக்க வேண்டும். உண்மையான அஹ்மதியாக மாற வேண்டும். மேலும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை இதுவரை அடையாளங்கண்டு கொள்ளாத முஸ்லிம்களுக்கு அடையாளங்கண்டு கொள்வதற்கும் அன்னாரின் பைஅத்தின் கீழ் வருவதற்கும் அல்லாஹ் அவர்ளுக்கு நற்பேறு வழங்குவானாக. முழு உலகிலும் இஸ்லாத்தின் கொடியும், ஹஸ்ரத் முஹம்மத் (ஸல்) அவர்களின் கொடியும் மிக விரைவாக பட்டொளி வீசி பரப்பதை நாம் காண்போமாக. முழு உலகிலும் ஏகத்துவம் நிலைபெற்று விட்டதை நாம் காண்போமாக.

(தமிழில்: மவ்லவி A. அப்துர் ரஹ்மான் தாஹிர்)

......☆......☆......☆......

*(முதல் பக்கத்தின் தொடர்ச்சி...)*

என்னிடத்தில் வந்து விட்டால் நான் தங்களுக்கு தொண்டாற்றும் நற்பேறு பெறுவேன். மேலும் நான் நோயாளியாக இருக்கின்றேன். எனக்காக துஆவும் செய்யுங்கள் என்றும் அங்கிருந்த ஆட்சியாளர் எழுதியிருந்தார். இது நமக்கு ஓர் ஆங்கில புத்தகத்திலிருந்து தெரிய வருகின்றது. எனினும் நான் பார்க்கின்றேன். ரோவத்துஸ் ஸஃபா என்ற ஓர் இஸ்லாமிய வரலாற்று புத்தகம் உள்ளது. இதுபோன்ற கருத்து அதிலும் காணப்படுகிறது. எனவே மஸீஹ் (அலை) நிச்சயமாக நுசாய்பினுக்கு வருகை தந்தார். மேலும் அதே வழியாகத்தான் அவர் இந்தியாவை வந்தடைந்தார் என்றும் உறுதி ஏற்படுகிறது. அனைத்து ஞானமும் அல்லாஹ்வுக்கே உள்ளன. எனினும் இந்த பயணத்தில் இன்ஷா அல்லாஹ் உண்மை திறந்து விடும் என்றும் அசல் விவகாரம் தெளிவாகி விடும் என்றும் எமது உள்ளம் சாட்சி அளிக்கின்றது.

மேலும் மஸீஹ் (அலை) அவர்களின் இந்த பயணத்தைப் பற்றி சில விவகாரங்களில் ஒளி பாய்ச்சுகின்ற அல்லது சீடர்களில் யாராவது ஒருவருடைய கபரைப் பற்றி தெரிந்து கொள்வது குறித்து அல்லது எமது எண்ணங்களை நிரூபிப்பதற்கு உதவியாக சில எழுத்துக்கள் அல்லது வேறு சில சான்றுகள் இந்தப் பயணத்தில் கிடைத்து விடும் என்பதும் சாத்தியமாகும். எனவே நான் எனது ஜமாஅத்தைச் சார்ந்த 3 நபர்களை இந்த பயணத்திற்காக ஆயத்தப்படுத்தியுள்ளேன். அவர்களுக்காக நான் ஓர் அரபி புத்தகத்தையும் எழுத விரும்புகின்றேன். அது தப்லீக்கிற்காக அமையும். அவர்கள் எங்கெல்லாம் செல்வார்களோ அங்கு அதனை அவர்கள் விநியோகிக்க வேண்டும். இவ்வாறு இந்த பயணத்தின் மூலம் நன்மையும் ஏற்படும். நமது ஜமாஅத்தும் பரவிக் கொண்ட செல்லும்.

(மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 305, 306 – 2018 ஆம் ஆண்டு காதியானில் அச்சிடப்பட்டது)

......☆......☆......☆......

அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தைப் பற்றி அறிந்து கொள்ள:–
www.alislam.org

*(கடைசி பக்கத்தின் தொடர்ச்சி...)*

கூறினார்கள்: நீங்கள் 5 வயதை உடையவராக இருக்கும்பொழுது ஃபிராக் Legging இல்லாமல் அணியக்கூடாது. உங்களது கால்கள் மறைக்கப்பட்டிருக்க வேண்டும். ஏனென்றால் இனி சிறிது கொஞ்சம் கொஞ்சமாக நமது ஆடைகள் மறைக்கப்பட்டிருக்க வேண்டும் என்ற உணர்வு உங்களிடத்தில் ஏற்பட வேண்டும். Sleveless ஃபிராக் அணியக்கூடாது. அடுத்து நீங்கள் உங்களுக்கு 6 வயதாக இருக்கும்பொழுது Legging அணிந்து கொண்டு பள்ளிக்கூடத்திற்கு செல்ல வேண்டும். நீங்கள் 10 வயதை அடைந்து விடும்போது சிறிதளவு ஸ்கார்ஃப் அணிவதற்கான பழக்கத்தை ஏற்படுத்த வேண்டும். உங்களுக்கு 11 வயதாகும்போது பின்னர் முழுமையாக ஸ்கார்ஃப் அணிய வேண்டும். இங்கும் கூட குளிர்காலத்தில் மக்கள் ஸ்கார்ஃப் அணிந்து கொள்கிறார்கள். குளிர்காலமாக இருக்கும்போது தமது காதுகளை மறைத்துக் கொள்கின்றனர். அது ஸ்கார்ஃப் ஆகவே அமைகின்றது.

ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: சில பெண் பிள்ளைகள் 10 வயதிலும் சிறு குழந்தைகளாகவே தென்படுகின்றன. சில பிள்ளைகள் 10 வயதில் 12 வயது பிள்ளைகளைப் போன்று தென்படுகின்றன. உயரமாக வளர்ந்து விடுகின்றனர். எனவே ஒவ்வொரு பெண் பிள்ளைகளும் இதை கவனத்தில் கொள்ள வேண்டும். அதாவது அவர் பெரிய பிள்ளையாக தென்பட்டால் பின்னர் கண்டிப்பாக ஸ்கார்ஃப் அணிய வேண்டும். சிறிய வயதில் ஸ்கார்ஃப் அணிவதற்கான பழக்கத்தை ஏற்படுத்துங்கள். அவ்வாறு செய்தால் பிறகு வெட்கம் ஏற்படாது. இல்லையென்றால் வாழ்நாள் முழுவதும் வெட்கப்பட்டுக் கொண்டே இருப்பீர்கள். நான் 12 வயதில், 13 வயதில் அல்லது 14 வயதில் ஸ்கார்ஃப் அணிந்து கொள்வேன் என்று கூறினால் நீங்கள் அவ்வாறு எண்ணிக் கொண்டே இருப்பீர்கள். உங்களுக்கு வெட்கம் வந்து விடும். பின்னர் நான் தற்போது ஸ்கார்ஃப் அணிந்தால் பின்னர் ஏனைய பெண் பிள்ளைகள் என்னை கிண்டல் செய்வார்கள். என்னைக்கண்டு சிரிப்பார்கள் என்று வெட்கப்படுவீர்கள்.

எனவே ஸ்கார்ஃப் அணிகின்ற பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். எனவே 7, 8, 9 வயதிலேயே ஸ்கார்ஃப் அணிய தொடங்கி விட வேண்டும். பெண் பிள்ளைகளுக்கு மத்தியிலும் ஸ்கார்ஃப் அணிந்திருக்க வேண்டும். அவ்வாறு செய்தால் உங்களுக்கு ஏற்படுகின்ற வெட்கம் நீங்கி விடும். பின்னர் நீங்கள் பெரிய பிள்ளைகளாக தென்படும்போது முழுமையான முறையில் ஸ்கார்ஃப் அணிய வேண்டும். உங்களுக்கு அதுவே போதுமானதாகும். அதேநேரம் வெட்கத்தை பேணுவதே பர்தா அணிவதன் நோக்கமாகும் என்பதை பெரிய பெண் பிள்ளைகள் அறிந்து கொள்ள வேண்டும். ஐரோப்பியர்கள் அல்லது மேற்கத்திய Influence ன்கீழ் வரக்கூடிய பழைய காலத்து மக்களின் ஆடைகள் நீளமானதாகவே இருந்துள்ளன. நீண்ட Maxi ஃபிராக் அணிந்து வந்துள்ளனர். இப்போது இந்த மக்கள் நிர்வாணமாக திரிகின்றனர். (தொடரும்......)

EDITOR
Moulavi.O.M. MUZZAMMIL AHMAD
SUB EDITOR
Moulavi. ABDUR RAHMAN TAHIR
Mobile : + 91 96774-14441
+91 88381-58410
E-mail : subeditortamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785
Weekly BADAR Qadian
பதர் வாரப் பத்திரிகை காதியான்
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516
Postal Reg.No. GDP-39/2020-2022 Vol. 6 Thursday 01 July 2021 Issue No. 26

MANAGER
SHAIKH MUJAHID AHMAD
Mobile : +91 99153-79255
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.575/- (Per Issue Rs. 11/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

# ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்ய) அவர்களின் ஆஸ்திரேலியா சுற்றுப் பயணம் (செப்டம்பர் 2013)

**12 அக்டோபர் 2013 (சனிக்கிழமை)**

**வாகிஃபாத்தே நவ் பிள்ளைகளுக்கான வகுப்பு**

அல்லாஹ் நமக்கு ஏன் தென்படுவதில்லை? என்று ஒரு சிறுமி கேட்டார். இக்கேள்விக்கு பதிலளித்தவாறு ஹுஸூர் (அய்ய) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்:

அல்லாஹ் ஓர் ஒளியாகவே இருக்கின்றான். அவன் எவ்வாறு தென்பட முடியும். ஆயினும் அல்லாஹ்வின் வல்லமைகள் தென்படுகின்றன. நீங்கள் துஆ செய்கின்றீர்கள். அது ஒப்புக் கொள்ளப்படுகின்றது. அவ்வாறு துஆ ஒப்புக் கொள்ளப்படுவதும் இறைவன் தென்படுவதே ஆகும். இப்போது 15 நிமிடங்களே உள்ளன. இதில் எனது பணி நடந்து விட வேண்டும் என்று நான் இப்போது அல்லாஹ்விடத்தில் வேண்டினேன். அல்லாஹ்வும் எனது ஆசையை முழுமை செய்து விட்டான். இது அல்லாஹ்வின் கருணையாகும். அல்லாஹ்வுடைய முழு படைப்புகளும் உள்ளன. செடிகள் இருக்கின்றன; Vegitation உள்ளது. மேலும் ஆஸ்திரேலியா Flora & Flowa என்ற பெயரால் பிரபலமான இடமாக அழைக்கப்படுகிறது.

ஆக இந்த அனைத்து விஷயங்களும் அல்லாஹ் படைத்தவை ஆகும். Plant-ன் இலைகள் இல்லையென்றால் குலோரோஃபில் ஆனது Plant-ஐ உயிர்ப்பிக்கின்றது. ஆனால் நான் தற்போது இங்கு எப்படிப்பட்ட செடிகளை பார்த்துள்ளேன் என்றால் ஒரு குச்சி மட்டுமே உள்ளது. அதுவே இலைகளின் பங்கை ஆற்றுகின்றது. அந்த குச்சிக்கு மேல் மிகவும் அழகான வண்ணமயமான பூ ஆனது அமைந்துள்ளது. எனவே இதுவும் அல்லாஹ்வின் ஒரு வல்லமையே ஆகும். அல்லாஹ் படைத்துள்ள ஒவ்வொரு விஷயத்தையும் ஆழமாக பார்க்க வேண்டும். அவ்வாறு செய்தால் அல்லாஹ் அங்கு தென்படுவான்.

ஒரு வாக்கிஃபே நவ் பெண் பிள்ளை இவ்வாறு கேள்வி கேட்டார். எங்களுக்கு திருமணம் நடைபெறும்போது எங்கள் மீது குடும்பம் அல்லது பிள்ளைகளின் பொறுப்புகள் வந்து விடுகின்றன. அப்போது நாங்கள் வக்ஃபே நவ் பிள்ளையாக இருப்பதற்கான உரிமையை சரியான முறையில் எவ்வாறு நிறைவேற்ற முடியும்?

இக்கேள்விக்கு பதிலளித்தவாறு ஹுஸூர் அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: சரியான வழிமுறை என்னவென்றால், கடமையான ஐவேளை தொழுகைகளை தொழ வேண்டும். தஹஜ்ஜுத் தொழ முடியும் என்றால் அதனையும் தொழ வேண்டும். லஜ்னா அமைப்பின் ஏதாவது பணி உங்களிடம் ஒப்படைக்கப்பட்டால் அதனை எந்த அளவுக்கு முடியுமோ செய்ய வேண்டும். பின்னர் மிகப்பெரிய பொறுப்பு என்னவென்றால், அல்லாஹ்வுடன் தொடர்பு ஏற்பட்டு விடுகின்ற அளவிற்கு உங்களது பிள்ளைகளுக்கு தர்பிய்யத் வழங்க வேண்டும். நான் வாக்ஃபே நவ் ஆவேன். எனது பணி என்னவென்றால், நான் எனது தர்பிய்யத்தும் செய்ய வேண்டும். எனது குடும்பத்திற்கும் தர்பிய்யத் வழங்க வேண்டும். எனது பிள்ளைகளுக்கும் தர்பிய்யத் வழங்க வேண்டும். எனவே நீங்கள் எனக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று உங்களது கணவரிடம் இந்த உணர்வை ஏற்படுத்த வேண்டும். கணவன் தந்தை என்ற ரீதியில் பிள்ளைகளிடம் தனது பங்களிப்பை சரி வர வழங்கவில்லை என்றால் பின்னர் பிள்ளைகளுக்கு சரியான தர்பிய்யத் கிடைக்க முடியாது.

எனவே மிகப்பெரிய பொறுப்பு என்னவென்றால் குடும்பத்தின் தர்பிய்யத் ஆகும். உங்களைப் பொறுத்தவரை இதுவே மாபெரும் நற்கூலியாகவும் அமையும்.

ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: ஹதீஸில் இவ்வாறு வருகின்றது: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடத்தில் ஒரு பெண்மணி வந்தார். அவர் இவ்வாறு கூறினார்: எமது கணவர் சம்பாதிக்கின்றார். ஜிஹாதிலும் செல்கின்றார். சந்தாவும் வழங்குகின்றார். ஆண்கள் செய்யக்கூடிய ஏராளமான பணிகள் எப்படிப்பட்டதாக இருக்கின்றதென்றால் அதனை அவர்கள் பெரும்பாலும் வெளியில் நிறைவேற்றுகின்றார்கள். பெண்களாகிய நாங்கள் அந்தப் பணிகளை வீட்டில் செய்ய முடிவதில்லை. இவ்வாறிருக்க ஜிஹாத் மற்றும் சந்தா கொடுப்பதற்கான நற்கூலி எங்களுக்கும் கிடைக்குமா? என்று கேட்டார்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், ஆம்! கிடைக்கும் என்று கூறினார்கள். ஏனென்றால் நீங்கள் அவர்களது குடும்பத்தை நல்ல முறையில் கண்காணிக்கின்றீர்கள். அவர்களது பிள்ளைகளுக்கு தர்பிய்யத் வழங்குகின்றீர்கள். அவர்கள் வெளியில் இருக்கும்போது குழந்தைகளை நல்ல முறையில் பராமரிக்கின்றீர்கள். அதன் காரணமாக நல்ல சந்ததிகள் உருவாகிக் கொண்டு செல்கின்றன. இதன் காரணமாக உங்களுக்கும் ஆண்களுக்கு கிடைக்கின்ற அதே அளவிலான நற்கூலி கிடைக்கும். அது மட்டுமல்ல நீங்கள் இதனையும் பொறுத்துக் கொள்கின்றீர்கள். அதாவது உங்களது கணவர்களை மார்க்கத்திற்கு தொண்டாற்றும்படி அனுப்பி வைக்கின்றீர்கள்.

கணவர் உலகத்திற்கு தொண்டாற்றிக் கொண்டிருக்கின்றார். மார்க்கத்திற்கு தொண்டாற்றவில்லை என்றாலும் ஹதீஸில் இவ்வாறு வருகின்றது: பெண்கள் அந்நிலையில் வீட்டின் பொறுப்பாளராக இருக்கின்றார். எனவே வக்ஃபே நவ் பிள்ளைகளின் பொறுப்பு என்னவென்றால், அவர்கள் தமது புதிய சந்ததிகளை அஹ்மதிய்யத்தில் நிலைபெறச் செய்ய வேண்டும். அல்லாஹ்வுடன் அவர்களுக்கு தொடர்பு ஏற்படுத்த வேண்டும்.

ஒரு பெண் பிள்ளை இவ்வாறு கேட்டார்: நாங்கள் பள்ளிக்கூடங்களுக்கு செல்கின்றோம். நாங்கள் எந்த வயதில் தலையில் ஸ்கார்ஃப் அணிய வேண்டும்.

இதற்கு பதிலளித்தவாறு ஹுஸூர் அவர்கள் இவ்வாறு

*(தொடர்ச்சி 11 வது பக்கம்...)*

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad